957

957/50.

விக்ருதி ஸூ
மார்கழி மீ

ஸம்புடம் 9
ஸஞ்சிகை 12

ஸ்ரீ:

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

[ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகை]

OF THE REGISTRAR OF BOOKS

ஸம்பாதகர்:

P. S. ஸ்ரீநிவாஸதேசிகாசார்யர், M.A., B.L., சிரோமணி.
(அட்வொகேட்)

ப்ரசுரிக்கு மிடம்

நெ. 2, ஆதியப்பமுதலி தெரு, புரசைவாக்கம்;
சென்னை—7.

JL
Q22 ..24, N91.
N50,9.12

வர்ஷச் சந்தா ரூபா 3—0—0 | தனிப்பிரதி விலை 0—4—0 | DECEMBER 1950 VOL. 9 NO 12

189276.

விஷய ஸூசிகை.

		பக்கம்
1.	ஸ்ரீ ஸங்கல்பஸூர்யோதயம் ...	358
2.	ஆசார்ய வைபவம் ...	362
3.	பஞ்சாங்க ஸங்க்ரஹம் ...	367
4.	உபயவேதாந்த ஐககண்ட்யம் ...	368
5.	ஸ்ரீ ஆசார்யாப்யுதயம் ...	372
6.	ஆஸ்திக்யம் ...	375
7.	வஸ்த்ரதாரணம் ...	379
8.	புயலும் பொறுமையும் ...	383
9.	கைமுதிக ந்யாய தத்வம் ...	389
10.	செய்திகள் ...	392
11.	ஸம்பாதகரின் குறிப்புகள் ...	394

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா ப்ரதி இங்கிலீஷ் மாதம் 15-ம் தேதி சந்தாதாரர்களுக்குத் தபாலில் போடப்படுகிறது. ஒவ்வொரு சந்தாதாரருக்கும் ஸஞ்சிகை அனுப்பப் படுகிறதா என்று பார்ப்பதில் விசேஷ கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. இருப்பினும் சில சந்தாதாரர்களிடமிருந்து ஸஞ்சிகை கிடைக்கவில்லை யென்று கடிதங்கள் வருகின்றன. ப்ரதி இங்கிலீஷ் மாதம் 20-ம் தேதிக்குள் ஸஞ்சிகை கிடைக்காவிட்டால் உடனே சந்தாதாரர்கள் அந்த விஷயத்தைத் தெரிவித்தால் வேறு ஸஞ்சிகை அதற்கடுத்த மாத ஸஞ்சிகையுடன் அனுப்பப் படும். விலாஸ மாறுதல்களை உடனுக்குடன் தெரிவிக்காத காரணத்தால் ஸஞ்சிகை கிடைக்காவிடில் அதற்கு பதில் ஸஞ்சிகை அனுப்பப்படமாட்டாது.

𑌶𑍍𑌰𑍀𑌃

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑌃



ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

ஸம்புடம் 9 | **விக்ருதி ஹு மார்கழி மீ** | **ஸஞ்சிகை 12**

"𑌅𑌹𑍋𑌬𑌿𑌲𑍇 𑌗𑌾𑌰𑍁𑌡𑌶𑍈𑌲𑌮𑌧𑍍𑌯𑍇
𑌕𑍃𑌪𑌾𑌵𑌶𑌾𑌤𑍍 𑌕𑌲𑍍𑌪𑌿𑌤𑌸𑌨𑍍𑌨𑌿𑌧𑌾𑌨𑌮𑍍 ।
𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍍𑌯𑌾 𑌸𑌮𑌾𑌲𑌿𑌙𑍍𑌗𑌿𑌤𑌵𑌾𑌮𑌭𑌾𑌗𑌂
𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌂 𑌶𑌰𑌣𑌂 𑌪𑍍𑌰𑌪𑌦𑍍𑌯𑍇 ॥"

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

என்னும் ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகையைப்பற்றி

ஸ்ரீ அழகியசிங்கரின் ஆசாஸந அநுசாஸநங்கள்.

𑌶𑍍𑌰𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑍍𑌰𑌿𑌯𑌾 𑌶𑍍𑌰𑍀𑌮𑌨𑍍𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌕𑌰𑍁𑌣𑍋𑌦𑌿𑌤𑌾 ।
𑌶𑍍𑌰𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌕𑌟𑌾𑌕𑍍𑌷𑍇𑌣 𑌜𑍀𑌯𑌾𑌦𑌾𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌤𑌾𑌰𑌕𑌮𑍍 ॥

𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌭𑌕𑍍𑌤𑌾𑌨𑌾𑌂 𑌗𑍇𑌹𑍇 𑌗𑍇𑌹𑍇 𑌸𑌦𑌾 𑌵𑌸𑍇𑌤𑍍 ।
𑌶𑍍𑌰𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑍍𑌰𑌿𑌯𑌾 𑌹𑍍𑌯𑍇𑌷𑌾 𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑍍𑌰𑌿𑌯𑌯𑌾 𑌸𑌹 ॥

[ஸ்ரீ ந்ருஸிம்ஹனுடைய கருணையால் உண்டாகி இருக்கும் இந்த 'ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா' என்னும் பத்ரிகை, அந்த ந்ருஸிம்ஹனுடைய கடாக்ஷத்தாலும் ஸங்கல்பத்தாலும் சந்த்ரன் நக்ஷத்ரங்கள் உள்ளவரையில் அவை போலவே சிறப்புடன் வாழக்கடவது.

நம் ந்ருஸிம்ஹ பக்தகோடிகளின் க்ருஹங்கள்தோறும் இந்த 'ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா' என்னும் பத்ரிகை, ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியையாகிற மஹா லக்ஷ்மியுடன் நித்யமாய் வஸிக்கக்கடவது.]

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம்

(9-ம் அங்கம்)

[சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி]

[ஸ்ரீ. உப. A. V. கோபாலாசார்ய ஸ்வாமி, M.A., B.L., அட்வோகேட், திருச்சி.]

முதலெழுத்தான ப்ரணவத்திலடங்கியுள்ள ‘ஆய’ என்னும் நான்காம் வேற்றுமையிலும், ‘நாராயணாய’ என்ற பதத்தின் கடையில் நான்காம் வேற்றுமையிலும் இந்த சேஷ சேஷித்வ ரஸத்தை இருதரம் முதலெழுத்திலும் கடைபெழுத்திலும் இம்மூலம் காட்டுவது. முதலெழுத்தில் மறைந்திருக்கிறது பலதசையில் ஸ்பஷ்டமாய் ப்ரகாசிக்கிறது. இவை மூன்றிலும் மற்றொன்றையும் கூட்டிக் கொள்ளாமல் ஐகாந்த்யநியமம் வேணுமென்பதை ‘நியமேந:’ என்ற பன்மையால் காட்டுகிறார். ஒவ்வொன்றும் தனித்தனியே லக்ஷணம், மூன்று லக்ஷணங்கள் என்பதையும் பன்மை காட்டுகிறது. ஸ்ரீபாஷ்யத்தில் ஸாதித்த லக்ஷண வாக்யங்களை இந்த முதல் பதம் பராமர்சிப்பதால், ‘ப்ரப்ருதி’ (முதலான) என்பதற்கு அங்கிருந்து மற்ற இரண்டையும் கூட்டிக்கொள்ளவேணும். ‘உ’ என்ற நடுவெழுத்தாலும், ‘ந, ந’ என்று தானும் தன்னதல்ல, தன்னுடையவைகளும் தன்னதல்ல வென்று திரும்பவும் திரும்பவும் மறுத்தலாலும், ‘அவனுக்காக’ என்ற நான்காம் வேற்றுமையாலும், மூன்று பதங்களும் ‘ஏவ’ என்ற நியமமாக உயிரை வற்புறுத்துகின்றன.

‘ஆதிகர்த்ரு ஶரீரம்’ – ஆதிகர்த்தா தான் அந்தர்யாமி; பின் கர்த்தாக்களான சதுர்முகாதிகள் அந்தர்யாமியான கர்த்தாக்களல்ல. குலாலாதிகள் (குசவன் முதலியவர்கள்) போல் வெளியேநின்று செய்யும் கர்த்தாக்களே. ஆகையால் அவர்களுக்கு கார்யங்கள் சரீரமல்ல. முதல் ஸ்ருஷ்டியில் ‘தானே’ உயிராக உள்ளிருந்து நாமரூபவ்யாகரணம் செய்கிறான். அதற்கு வ்யஷ்டிஸ்ருஷ்டி என்று பெயர். ‘ஸோऽபித்யாய ஶரீராத் ஸ்வாத்’ என்று மநுஸ்ம்ருதி தொடக்கவசநம். முன்பு ஸூக்ஷ்மமாய் அவ்யக்தமாயிருந்த சரீரத்தை இப்பொழுது ஸ்தூலமான சரீரமாக வ்யாகரணம். ஆதி மூல கர்த்தாவுக்கு ஸர்வமும் சரீரமென்பது ஆதி மூல மந்த்ரத்தால் காட்டப்படுகிறது.

‘ஸந்மூலாஸ் ஸோம்யேமாஸ் ஸர்வா: ப்ரஜா: ஸதாயதநா: ஸத்ப்ரதிஷ்டா:’ என்னும் ஸத்வித்யா ச்ருதியை இரண்டாம் பாதம் நினைக்கிறது. ‘ஸத்’ என்னும் பரமாத்மா தான் மூலமென்பதை மூலமந்த்ரம் விளக்குகிறது. எல்லாவற்றின் ஸத்தையே அதை மூலமாகக்கொண்டது. அதுவே ஸகலத்திற்கு மாயதநம், ஆதாரம், இருப்பிடம். ஸர்வப்ரவ்ருத்திகளுக்கும் மூலம், ஆதாரம், ஸத்தை, தொடர்ந்து இருப்பது, ஸகல ப்ரவ்ருத்தி நிவ்ருத்திகள், அடையும்

ப்ரயோஜநங்கள் எல்லாம் இந்தப் பரமாத்மாவின் ஆயத்தமே, அவன் அதீநமே. பின்னால் உள்ள 'பஶ்சாத்' என்பது நம் மனத்துக்கும் கண்ணுக்கும் எதிரே யுள்ள ப்ரபஞ்சத்தைக் குறிப்பது. முன் 'பஶ்சாஜ்ஜாதம்' என்பதில் உள்ள 'பஶ்சாத்' என்பது பரமாத்மா. கண்ணுக்குத்தெரியாத அவனை 'பஶ்சாத்' [இதோ எதிர்நிற்கும்] என்று கூறலாமோ என்று சங்கிக்கலாம். இந்த பூதக் கண்ணாடி கையிலிருக்கையில், அதில் பார்க்கையில் அத்ருச்யமான உள்ளுயிரும் வெளி ப்ர பஞ்சத்தைப்போல இதோ கண் முன்னே நிற்பதுபோ லிருக்கிறதென்று ரஸம். 'கண்ணுள்ளே நிற்கும் காதன்மையால் தொழில், எண்ணிலும் வரு மென்னினி வேண்டுவம்' என்று ஆழ்வார் மறை காட்டுவதுபோல ஜ்ஞாநக்கண்ணை அளிக்கும் பூதக்கண்ணாடி மந்த்ரம். ஸத்வித்யையில் 'ஸ்ஸுப்ரதிஷ்டா:' என்னுமிடத்தில் 'ப்ரதிஷ்டை' என்பதால் 'சாச்வத ப்ரதிஷ்டையான மோக்ஷ வின்ப லயத்தையும்' கொள்ளவேணும் என்பதை 'பஹ்வேஷ' என்பதால் விளக்குகிறார். 'யஸ்ய ஸம்வத்ஸ்ய' என்றல்லவோ 'க்ஷணா க்ஷணா' என்று 'மோக்ஷப்ரதிஷ்டையை' எதிர்பார்த்துக் காத்து நிற்பது. 'பஹ்வேஷ' — எல்லா ஸுகங்களும் அவனால்தான் கிடைப்பது; அவன் ஸங்கல்பாயத்தம் என்று மைத்ரேயீ ப்ராஹ்மணம் விளக்கியதையும் இங்கே பன்மையால் விளக்குகிறார்.

'வ்யாவகாஶப்ரத்யக்ஷே பகவதி' — பகவானை ப்ரத்யக்ஷம்போல இக்கண்ணாடி காட்டிப் பார்க்கச் செய்கிறது. 'பஶ்சாத்' என்று பகவானை நேரில் காண்பதுபோல் குறிக்கத் தடையென்ன? 'பகவாந்' என்னும் சப்தம் முக்யமாக பரப்ரஹ்மத்தைச் சொல்லுவது.

'ஶுத்தே மஹாவிபூத்யாக்யே பரே ப்ரஹ்மணி ஶப்த்யதே |
மைத்ரேய! பகவச்சப்த: ஸர்வகாரணகாரணே ||
ஸம்பர்த்தேதி ததா பர்த்தா பகாரோऽர்த்தத்வயாந்வித: |
நேதா கமயிதா ஸ்ரஷ்டா ககாரார்த்தஸ்ததா முநே ||
ஐஶ்வர்யஸ்ய ஸமக்ரஸ்ய வீர்யஸ்ய யஶஸ: ஶ்ரிய: |
ஜ்ஞாநவைராக்யயோஶ்சைவ ஷண்ணாம் பக இதீரணா ||
வஸந்தி தத்ர பூதாநி பூதாத்மந்யகிலாத்மநி |
ஸ ச பூதேஷ்வஶேஷேஷு வகாரார்த்தஸ்ததோऽவ்யய: ||'

என்று பராஶரர் முடிவில் ஆறாவது அம்சம் ஐந்தாவது அத்யாயத்தில் எழுத் தெழுத்தாகப் பிரித்துப் பொருள்கள் கூறியதை இங்கே கொள்ளவேணும். 'இதி விஶ்வம் பஶ்யந்' — முன்பாதியில் கூறியபடி ஸர்வத்தையும் அவன் சரீரமாகப் பார்க்கையால் எல்லாவற்றுக்குள்ளும் ஒருள்ளுயிராய் நாதன் இருந்து தன் உடலைப்போல நியமித்து நிறைந்திருப்பதை இக்கண்ணாடியில், க்ருஷ்ணன் சரீரத்தில் அர்ஜுநன் விச்வத்தைப் பார்த்ததுபோலக் கண்டபின் 'பஶ்யமேவா அதீயம்' முதலிய ச்ருதிகளின் உள்பொருளுக்குள் எளிதில் நுழைவான்.

ஹார்த்தனுக்குள் நுழைந்தால் 'ச்ருதி ஹார்த்தத்தில்' 'ச்ருதியினுட்கருத்துக்குள்' நுழைவான்.

வ்யவஸாயர்:— இதுதான் தத்வம் (உண்மை).

(ப்ருஹதாரண்யகத்தில்) உத்தாலகர் யாஜ்ஞ்யவல்க்யரை அந்தர்யாமியை உபதேசிக்கும்படி கேட்கையில், நான் காப்யரென்பவரை இந்த லோகத்தையும் பரலோகத்தையும் ஸர்வபூதங்களையும் தான் உள்ளேயிருந்து நியமனம் செய்யும் அந்தர்யாமியை நீர் அறிவீரோ? என்று கேட்டேன். 'நான் அவரை அறியேன்' என்று காப்யர் கூறினர். எவன் எல்லா ப்ரபஞ்சங்களையும் சேர்த்துப் பிடித்துப் பிணைத்திருக்கும் ஸூத்ரத்தையும் ஸூக்ஷ்மமான வாயுவையும் எல்லாவற்றுக்குமுள்ளேயிருந்து நியமிக்கும் அந்தர்யாமியையும் அறிந்து பஜனம் செய்வனோ அவன்தான் ப்ரஹ்மவித்; அவன்தான் உலகமறிந்தவன்; தேவர்களையறிந்தவன்; அவன்தான் வேதமறிந்தவன்; ப்ராணிகளையறிந்தவன்; தன்னையறிந்தவன்; எல்லாமறிந்தவன்; ஸர்வவித். அதை நான் அறிவேன். உலகங்களைப் பிணைக்கும் ஸூத்ரத்தையும் அந்த அந்தர்யாமியையும் நீர் அறியாமல் பசுக்களை ஓட்டிப்போவீராகில் உம் தலைகீழே விழும்' என்று முதலில் கூறியதற்கு, 'நான் அந்த ஸூத்ரத்தையும் அந்த அந்தர்யாமியையும் அறிவேன்' என்று யாஜ்ஞ்யவல்க்யர் கூறவே, 'அறிந்தபடி நீர் கூறவேணும்' என்று உத்தரவாக்யங்களால் உபதேசித்த சரீர சரீரி பாவ ஸம்பந்த தத்வமிது. தேஹ ஸம்பந்தம் 21 தலைமுறை உண்டென்பர். 'स वेद स वेद स वेद' இதை அறிந்தவன் ஆத்மவித். தன்னையுள்ளபடி அறிந்தவன் ஸர்வத்தையும் உள்ளபடி அறிந்தவன் என்று இந்த ச்ருதி ஸ்பஷ்டமாக்கிற்று. தனக்கும் பரமாத்மா அந்தர்யாமிதான். தனக்கும் உயிரான அவருக்குத் தான் உடல் போன்றவனே; அந்த உயிரை விட்டுத் தன்னைத் தனியே பிரித்தால் தான் உயிரற்ற உடலேயாகுந்தனே. அந்த அந்தர்யாமி உள்ளேயிருந்து ஆத்மாவாய் இருப்பதால் தான் அம்ருதன் என்னும் உயிருடல் தத்வத்தை அறிந்தவன் ஸர்வவித். தத்வவித் என்ற தத்வ நிர்ணயத்தை இந்த ஸேநாபதி வாக்யம் வ்யஞ்ஜநம் செய்கிறது. 'स त आत्मा' அவன் உயிர், तत् அதனால், அக்காரணத்தால் அவன் உன் ஆத்மாவாக (உயிராக) இருப்பதனால் 'त्वं असि'— நீ ஜீவனாய் ஜீவவந்தனாய் இருக்கிறாய்; இல்லாவிடில் 'त्वं नासि' (ஸ ஆத்மா தத்வமஸி) என்றும் ச்ருதியின் ஓர் பொருளாகக் கொள்ளலாம். 'ऐतदात्म्यमिदं सर्वं तत्सत्यं' என்று கூறியதும் ஸர்வஜகத்தும் அவனை அந்தர்யாமியாகவுடையது. 'அதுவே ஸத்யம்' என்று கூறியதும் ஸ்பஷ்டம். கீதை முடிவிலும்,

'ईश्वरः सर्वभूतानां हृद्देशेऽर्जुन तिष्ठति ।
भ्रामयन् सर्वभूतानि यन्त्रारूढानि मायया ॥

तमेव शरणं गच्छ सर्वभावेन भारत ।
तत्प्रसादात्परां शान्तिं स्थानं प्राप्स्यसि शाश्वतम् ॥'

என்று இந்த ஸர்வாந்தர்யாமி தத்வத்தை உபதேசித்துக் கைதவமின்றி முழு ஹ்ருதயத்தோடு அவனைக் கால்பிடித்து அதன் க்ருபையால் சாந்தாநந்தசாச்வத மஹாஸ்தாநத்தை அடையலாமென்று அறுதியிடப்பட்டது. ஸூத்ரகாரரும் 'ஹார்தாநுக்ருஹீத:' என்று கடை சரீரத்திலிருந்து மோக்ஷம் செல்வதற்கு 101-வது ப்ரஹ்ம நாடியில் சேர்ந்து அங்கிருந்து வெளிக்கிளம்புவதற்கு ஹார்த்தனான அந்தர்யாமியின் அநுக்ரஹமே காரணமென்பதையும், இவன் அவனுக்குள் சரணம்புகுந்து அவன் க்ருபையைப் பெறவேணுமென்று எண்ணியே இவனுக்குள் அநாதிகாலமாய் இவனை விடாமலேயே கூட வஸித்து வருகிறான் என்பதையும் விளக்கினார். 'சாரீரகம்' என்று இந்த சரீரசரீரிபாவமான தத்வத்தைக் கொண்டுதான் சாஸ்த்திரத்திற்கு பெயர் வைத்தார். சரீரசரீரிபாவத்தை நன்கு விளக்கும் 13-வது க்ஷேத்ராத்யாயத்தின் முடிவிலும் பகவான்

'க்ஷேத்ரக்ஷேத்ரஜ்ஞயோரேவமந்தரம் ஜ்ஞாநசக்ஷுஷா ।
பூதப்ரக்ருதிமோக்ஷம் ச யே விதுர்யாந்தி தே பரம் ॥'

என்று கூறியதற்கு 'க்ஷேத்ரமென்னும் ஜீவசரீரம் க்ஷேத்ரஜ்ஞனென்னும் அந்த சரீரத்திற்குள்ள ஜீவாத்மா ஆகிய இவ்விரண்டிற்கு முள்ளுள்ள (அந்தரம்) அந்தர்யாமியையும் (ஸூத்ரகாரர் காட்டியபடி அந்த ஹார்த்த அந்தர்யாமி அநுக்ரஹத்தால்) பௌதிக ப்ரக்ருதி ஸம்ஸார மண்டலத்திலிருந்து முக்தனாவதையும் எவர்கள் (பரமனான அந்தர்யாமி அளிக்கும்) ஜ்ஞாநக்கண்ணால் உணர்கிறார்களோ அவர்கள் பரனை அடைவர்கள்' என்று பொருள் கொள்ளலாம். தன் சரீரம், தான் இவற்றுக்குள் அந்தரனாயிருப்பவன் ஸர்வாந்தர்யாமியான ஹார்த்தன். அவன் அநுக்ரஹத்தால் ப்ரஹ்ம நாடிக்குள் ப்ரவேசமும், உடனே ப்ரக்ருதியிலிருந்து மோக்ஷமடையும் வழியான அர்ச்சிராதி மார்க்கத்தோடு தொடர்பும் கிடைக்கும். மோக்ஷத்திற்கு இதுதான் மார்க்கமென்பது முன்பே 8-வது அத்யாயம் முடிவில் விஸ்தாரமாய் கூறப்பட்டது. அந்தர்யாமி உள்ளேயிருப்பதே இவனை 101-வது ப்ரஹ்ம நாடியில் சேர்த்து, அங்கிருந்து அர்ச்சிராதி மார்க்கமாக மோக்ஷத்தை யடைவிக்கவேதான் என்பது 'ஊஹாரகாஹரே தேவவஸிஷ்டு' என்கிற ச்லோகத்தால் ஸ்வாமியால் ஸ்பஷ்டமாக விளக்கப்பட்டது. அந்த ச்லோகம் அடுத்த அங்கத்திலும் படிக்கப்படுகிறது.

இந்த உண்மையைத் தெரிந்துகொண்டு இந்த அந்தர்யாமியான ஹ்ருதயேசனுக்குள் யோகாப்யாஸத்தால் உள்ளே நுழைந்து மெய் மறந்து ஸமாதியெனும் பரமாத்மாவோடு அவிபாகக் கலவியைப் பயிற்சி செய்யவேணும். 'ஸமாதி:' என்பது 'ஸமாப்யதிகதரித்ர:' ஒப்பது மிக்கது இல்லாதது. 'நிஸ்ஸமாப்யதிகம்' 'அதி:' என்பதற்கு அதிகம், மேல்பட்டது, மேல் என்று பொருள். ஸமமும் மேலுமில்லாத ஸமாப்யதிகமென்று ஸமாதியின் பொருள். ரஸம். யோக பூமிகளில் இது எல்லாவற்றுக்கும் மேல்பட்ட உயர்ந்த உப்பரிகை என்பர். இந்த ஸமாதியின் அப்யாஸத்திற்கு வழி காட்ட இந்த ரஹஸ்ய ஸூக்ஷ்ம மதிந்து நமக்கு யோகக் கண்ணை யநுக்ரஹிக்க மறுபடியும் ஓர் திவ்யமான (அலௌகிகமான) ஆசார்யனது கடாக்ஷம் பெறவேணும்.

(தொடரும்)

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம: ||

ஆசார்ய வைபவம்

[இது ஸ்ரீரங்கம் ஸ்ரீ அஹோபிலமடத்தில் ஸ்ரீ ஆதிவண்சடகோப யதீந்த்ர மஹாதேசிகன் உத்ஸவத்தின் போது ஸ்ரீ அஹோபிலமடம் ஆஸ்தான வித்வான், தேசிக தர்சந விஜயத்வஜ, புத்தங்கோட்டகம், ஸ்ரீ. உப. ஸ்ரீநிவாஸாசாரியர்ஸ்வாமியால் செய்யப்பட்ட உபந்யாஸத்தின் ஸங்க்ரஹம்.]

ஸர்வேச்வரன் ஸம்ஸாரிகளை ரக்ஷிப்பதற்காக இவ்வுலகத்தில் செய்யும் அவதாரங்கள் அம்சாவதாரம் என்றும், அநுப்ரவேசாவதாரம் என்றும் இருவகையாகும். அவற்றுள் ஸ்ரீவைகுண்டவாஸியான பரவாஸுதேவனுடைய திருமேனியின் அம்சத்திலிருந்து உண்டாகிற ராம க்ருஷ்ணாத்யவதாரங்கள் அம்சாவதாரம். பூர்வ ஜன்ம புண்ய விசேஷத்தினால் ஸர்வவிதமான மேன்மைகளோடு பிறந்த புண்ய புருஷர்களிடம் லோகோஜ்ஜீவநார்த்தமாக ஸர்வேச்வரனால் கொடுக்கப்பட்ட ஜ்ஞாந சக்திகளை உடைய பெரியோர்கள் அநுப்ரவேசாவதாரங்களெனப்படுவார்கள். இவர்களைத்தான் ஆசார்யர்கள் என்று சாஸ்திரங்கள் சொல்லுகின்றன. இவ்விரண்டுவித அவதாரங்களும் இவ்வுலகத்தின் ரக்ஷணார்த்தமாகவே உண்டாகின்றன. ஆனாலும் இவ்விரண்டு அவதாரங்களுக்குள் அம்சாவதாரங்களானராம க்ருஷ்ணாத்யவதாரங்களினால் செய்யப்படும் லோக ஸம்ரக்ஷணத்தைக் காட்டிலும் அநுப்ரவேசாவதாரங்களான ஆசார்யர்களினால் செய்யப்படும் லோக ஸம்ரக்ஷணமானது மிகவும் அழகியதாக இருக்கும்.

ஏனென்றால்:—

1. அம்சாவதாரங்களான ராம க்ருஷ்ணாத்யவதாரங்களினால் செய்யப்படும் ஸாது ரக்ஷணமானது ராவண கம்ஸாதிகளான அஸாதுக்களுடைய ஹிம்ஸாபூர்வமாகவே இருக்கும். அநுப்ரவேசாவதாரமான ஆசார்யர்களால் செய்யப்படும் ஸாதுரக்ஷணமோ வென்றால்:—

‘ஸஹஸ்ரஸா விஶ்வஸ்ய வஶ: ஸ்வீக்ருதாம்’

என்கிறபடியே அஸாதுக்களை ஹிம்ஸிக்காது அவர்களுக்கும் ஸாதுத்தன்மையை உண்டாக்கி ரக்ஷிப்பதால் இது அதைக்காட்டிலும் மேன்மை வாய்ந்திருக்கிறது.

2. அம்சாவதாரமானது விபரீதாநுஷ்டானம் செய்கிறவர்களை

‘ஏஷ ஏவ அஸாது கர்ம காரயதி’

என்கிறபடியே மேன்மேலும் விபரீதகாரியங்களையே செய்யும்படி செய்வித்து அவர்களைக் கெடுத்து விடுவதுண்டு. அநுப்ரவேசாவதாரமான ஆசார்யர்களோ வென்றால் ‘தாநு க்ஷமாயேதாவதேஶ: பாவயதே’ என்கிறபடியே பாபகாரி

களை மேன்மேலும் பாபகார்யங்களில் பிரவேசிக்காதபடி தங்கள் உபதேசமூல மாகத்தடுத்து அவர்களையும் ரக்ஷித்து விடுவதால் இது மேன்மை பெற்றதாகிறது.

3. அம்சாவதாரங்களில் தான் மனோரதித்துவந்தபடி உலகத்தைத் திருத்திப் பணிகொள்ள முடியாமல் 'ந மாம் து³ஷ்க்ருதினோ மூடா⁴:' என்றும், 'அப்ராப்ய மாம் நிவர்தந்தே' என்றும், 'அவஜானந்தி மாம் மூடா⁴:' என்றும், 'ஸ மஹாத்மா ஸுது³ர்லப⁴:' என்றும் வருந்திச் சொல்லுகிறபடியே தன் மனோரதஸித்தி யில்லாமல் வருந்தித் திரும்பிப்போய் விடுவதுண்டு. அநுப்ரவேசாவதாரத்திலோ வென்றால் அவ்வாறு மனோரதபங்க க்லேசமில்லாது

> 'மண்மிசை யோனிகள்தோறும் பிறந்து, எங்கள் மாதவனே
> கண்ணுறநிற்கிலும் காணகில்லா, உலகோர்களெல்லாம்
> அண்ணலிராமாநுசன் வந்து தோன்றிய வப்பொழுதே
> நண்ணருஞானம் தலைக்கொண்டு, நாரணற்காயினரே'

என்கிற பாசுரத்தின்படியே ஸகல ஸம்ஸாரிகளும் உஜ்ஜீவிக்கும்படி இருக்கையாலே மேன்மை பெற்றதாக இருக்கிறது

இவ்வாறு இவ்வவதாரங்கள் இரண்டுக்குள் அம்சாவதாரத்தைக்காட்டிலும் அநுப்ரவேசாவதாரம் மேன்மை பெற்றிருப்பதைக்குறித்து ஸ்ரீ தேசிகன்.

> 'ஆவாபோத்³வாஹ தைவதானாம் ஸமதிகாந்யாம் ந தாந்யாஹோ'

என்று அருளிச்செய்தார்.

இப்படித் தங்கள் க்ருபாதிசயத்தினால் லோகோஜ்ஜீவநம் செய்விக்கிற ஆசார்யாவதாரங்களுக்குள் 'மயர்வற மதிநல மருளப்பெற்ற' ஸ்ரீ சடகோபனுடைய அவதாரமானது, மேகங்கள் ஸமுத்ரஜலத்தை வாங்கி ஸர்வோபஜீவ்யமான தண்ணீராக உமிழுமாப் போலே' சில மனிதர்களுக்கு மாத்திரம் யோச்யங்களாகஇருந்த வேதாந்தங்களினுடைய ஸாராம்சங்களை 'வேதம் தமிழ் செய்த மாறன்' என்கிறபடி ஸர்வமனிதர்களும் அறிந்து அனுபவிக்கக் கூடிய தமிழ் பாஷையினால் அருளிச் செய்தபடியாலும், 'உண்ணுஞ் சோறும், பருகு நீரும், தின்னும் வெற்றிலையும், எல்லாம் கண்ணன்' என்கிறபடியே கண்ணனையே தமக்கு தாரகபோஷக போக்யங்களாக நினைத்து, உண்டியே, உடையே, உகந்தோடும் இம் மண்டலத்தோடு சேராது விலக்ஷண விஷயவைராக்யத்தோடு இருந்ததனாலும், தம்மிடம்வந்து கிட்டி நமஸ்காராதிகளைப் பண்ணி கேட்க வேண்டிய முறையை கடந்திருக்கும் ஸம்ஸாரிகளிடத்திலுங்கூட காருண்யாதிசயத்தினால் 'சொன்னால் விரோதமிது ஆகிலும் சொல்லுவன்' என்கிறபடியே அவர்களுக்கு ஹிதோபதேசத்தில் ப்ரவ்ருத்தித்தபடியாலும், நான்கு வேதங்களுடைய ஸாரமான அர்த்தங்களை தமக்கு பிற்காலத்திய ஸம்ஸாரிகளுடைய உஜ்ஜீவநார்த்தமாக க்ரந்தரூபமாக எழுதிவைத்ததனாலும் இவர் செய்தருளிய லோகோபகாரம் மிகவும் சிறந்ததாகிறது.

இவரைப்போல் லோகோபகாரார்த்தமான அநுப்ரவேசாவதாரமான ஸ்ரீபகவத்ராமாநுஜன் இவ்வுலகத்திற்குச் செய்தருளிய உபகாரமோ வென்றால், நம்மாழ்வாரைப் போல் ஒரே இடத்தில் எழுந்தருளியிருந்து உபதேசிக்காதபடி கல்லும் முள்ளும் நிறைந்த கானக மெங்கும் காலடி நோவ நடந்து ஆங்காங்கு ஸம்ஸாரிகளிருக்குமிடம் தாமே சென்று அவ்வெம்பிரான் பாதமாமலர் சூடும் பத்தியில்லாத பாவிகள் உய்ந்திடுவதையே தமக்குப் பரமபுருஷார்த்தமாகத் திருவுள்ளம்பற்றி ஹிதோபதேசங்களைப் பண்ணினபடியாலும், அவ்வுபதேசம் தன்னிலும், ‘[illegible]’ என்கிற விதியையும், பிறருக்குச் சொல்லவேண்டாம் என்கிற ஆசார்யநியமனத்தையும் அதிக கருணாதிசயத்தினால் அதிலங்கனம்பண்ணி உலகத்தின் உஜ்ஜீவநத்தையே பரமபுருஷார்த்தமாக நினைத்து பெரிய வோலக்கத்தில் ஸகல ஸம்ஸாரிகளும் கேட்கும்படி ரஹஸ்யார்த்தத்தை உபதேசித்தபடியாலும், தமக்கு பிற்காலத்திலுண்டானவர்களும் உஜ்ஜீவிக்கும்படியாக 9–கிரந்தங்களை செய்தருளி, அவைகளில் நாஸ்திக மதங்களை நன்கு நிராகரித்து ஆஸ்திக மதத்தை ஸ்தாபனம் செய்ததனாலும், தமக்குப் பிறகு இவ்வுலகம் விசேஷ பகவத்பக்தியோடு வாழ்ந்திருக்க வேண்டியதை நினைத்து, லோகோஜ்ஜீவநார்த்தமாக 74–ஆசார்ய பீடங்களை ஸ்தாபித்து வைத்தபடியாலும், ஸ்ரீ சடகோபன் செய்தருளிய லோகோபகாரத்தைக் காட்டிலும் ‘[illegible]’ ‘காரேய் கருணை இராமாநுச இக்கடலிடத்தில் ஆரே அறிபவர் நின்னருளின் தன்மையை’ என்கிறபடியே கருணைக்கடலான ஸ்ரீ பகவத்ராமாநுஜன் செய்தருளிய லோகோபகாரம் மிகவும் மேன்மை பெற்றதாகும்.

இம்மஹானுக்குப் பிறகு பகவதநுப்ரவேசாவதாரமான மஹாசார்யனாக அவதரித்த ஸ்ரீ நிகமாந்தமஹாதேசிகன்

‘[illegible] ।
[illegible] ॥’

என்கிறபடியே வித்யைக்கு அதிஷ்டான தேவதையான ஸ்ரீ ஹயக்ரீவனுடைய அநுக்ரஹ விசேஷத்தினால் ஸகல சாஸ்த்ர ஜ்ஞானம் அநுஷ்டானம் முதலிய ஆசார்ய குணங்களில் ஸமாதிக தரித்ரராய் விலக்ஷண வைராக்யத்தாலே உத்தம ஜீவனமாய் சாஸ்த்ரங்களில் சொல்லப்பட்ட உஞ்சவ்ருத்தி மாத்திரத்தினால் நிரதிசய ஐச்வர்யம் பெற்று வாழ்ந்திருப்பவரைப்போல் நித்யத்ருப்தராய் ‘மெய்யில் வாழ்க்கையை மெய்யெனக்கொள்ளும் இவ்வையந்தன்னொடும் கூடுவதில்லையான்’ என்கிறபடியே ஐஹிக ஸகல போகங்களிலும் விரக்தராய் இருந்தும் தமது அவதாரபலமான லோகோஜ்ஜீவநத்திற்காக ஸ்ரீ பகவத்ராமாநுஜன் போலவே இவ்வுலகமெல்லாம் தம் திருவடி நோவ நடந்து தமது ஜ்ஞாநாநுஷ்டாந வைராக்யாதிசயத்தினால். இவ்வுலகத்தில் தீர்ந்த அடியவர்களைத் திருத்திப் பணிகொண்டதோடு பிற்காலத்திலும் இவ்வுலகத்தின் உஜ்ஜீவநத்தைக் கருதி

ஒரே பாஷையிலன்றிக்கே பற்பல பாஷைகளிலும் அஜ்ஞர்களும் ஸர்வஜ்ஞர்களும் அப்யஸித்து உஜ்ஜீவிக்கும்படி அதி ஸரளமாயும் கடினமாகவும் 120 க்ரந்தங்களைத் தாம் எழுதி வைத்து, அக் க்ரந்தங்களிலும் நாஸ்திகாதி மதங்களைப் பல படியாக நிராகரித்தும் ஆஸ்திகமதத்தின் பெருமைகளை பூஷித்து அருளிச்செய்தும் ஆங்காங்கு நாஸ்திக வாதிகளோடு நேரிலேயே வாதப்போர்கள் புரிந்து அவர்களை ஜெயித்து இவ்வுலகத்தில் நாஸ்திக வாதத்வதை நசிக்கச் செய்ததாலும், கலியுக தோஷத்தினால் நசித்துப் போவதாக இருந்த ஸ்ரீ சடகோபன், ஸ்ரீராமாநுஜனால் ப்ரவ்ருத்திப்பிக்கப்பட்ட சரணாகதியாகிற மோக்ஷமார்க்கத்தை உபதேசமூலமாகவும் பற்பல க்ரந்தங்கள் மூலமாகவும் எங்கும் தழைத்தோங்கும்படி வளரச் செய்ததாலும் ஸ்ரீ பகவத்ராமாநுஜனைப்போல் எண்ணிறந்த சிஷ்யவர்க்கங்களைக் கொண்டும் இவ்வுலகத்தில் ஆஸ்திக மதம் அபிவ்ருத்தமாகும்படி செய்தருளின படியாலும் இவ்வாசார்யன் செய்த உபகாரம் மிகவும் சிறந்ததாகும்.

இப்படி ஜ்ஞாநம், அநுஷ்டாநம், வைராக்யம், பகவத்பக்தி, முதலிய ஆசார்ய குணங்களுடைய மேன்மையினால்

'தெஶிகொ நிமஶொஷாய–ா தஹஷாதாஸவிகொ ஜநஃ |
தஹஸாஹஸவஸியாzஞோ நாஸ்தி நாஸ்தி ஓஹீதலெ ||'

என்கிறபடியே இவ்வுலகத்தில் இவருக்கு ஒப்பானவர் மற்றொருவரில்லை என்று கவிபாடும்படி இவ்வுலகத்தில் வீற்றிருந்து தமது உபதேச மஹிமாதிகளினால் ஸர்வ மனிதர்களுடைய மனத்திலும் 'எழில் ஞான விளக்கை ஏற்றி இருளனைத்தும் மாற்றின' படியினாலே விலக்ஷண ஸூர்யனாய் விளங்கின வேதாந்ததேசிகனுடைய காலத்திற்குப் பிறகு இக்கலியின் கொடுமையினால் இவ்வுலகம் மறுபடியும் மோஹாந்தகாரத்தில் மோஹித்துக் கிடக்காதபடி இவ்வுலகத்தில் அநுப்ரவேசாவதாரமான ஆசார்யனாய் அவதரித்த ஸ்ரீ ஆதிவண்சடகோப யதீந்த்ர மஹா தேசிகன் 'விஷயீ வஹிஷ்யதி' என்று ஸ்ரீநிகமாந்தமஹாதேசிகன் அருளிச் செய்தபடியே அளவிறந்த ஜ்ஞான பக்தி வைராக்யாதி கல்யாண குணங்களோடு அவ்வேதாந்த தேசிகரே மறுபடியும் லோகஸம்ரக்ஷணார்த்தமாக இங்கு அவதரித்தருளினார் என்று அனைவராலும் கொண்டாடும்படியான மஹிமைகளையுடையவர். இவர் வைராக்யாதிஶயத்தினாலே பத்நீபரிக்ரஹ நிரபேக்ஷராய் ப்ரஹ்மசர்யாச்ரமத்திலேயே நிலைபெற்ற நெஞ்சுடையராக இருக்கையாலே இம்மஹாபுருஷன் மூலமாகவே இவ்வுலகத்தை உஜ்ஜீவிக்கும்படி செய்யவேணுமென்று நிச்சயித்து, சிங்கவேள் குன்றத் தெம்பெருமானால் ஸர்வ லோக ஸம்ரக்ஷணார்த்தமாக ஶாஸ்த்ராநுமதமாய் அளிக்கப்பட்ட மோக்ஷாச்ரமமென்று ப்ரஸித்தமான ஸந்யாஸாச்ரமத்தையும் ஸுதர்ஶந பாஞ்சஜந்யங்களையுமுடையராய் 'நவ தஹஸாநீ நிஷெவ்யஷு ஶஸீநெ விஜயக்ருதஃ' என்கிறபடியே ஸர்வேச்வரனுக்கு அத்யந்தாபிமதமான லோக ஹிதோபதேசங்களையே முக்ய கைங்கர்யமாக அநுஷ்டித்திருந்ததாலும் லௌகிகர்

கள் ஸுக ஸாதநங்களென்று ப்ரமித்திருக்கும் க்ரஹம், ஆராமம், க்ஷேத்ராதிகள் எல்லாம் 'யே ஹி ஸம்ஸ்பர்ஶஜா போகா து:கயோநய ஏவ தே' என்றும் 'பரிக்ரஹோ திக்ஷாயைவ யத்வ்ருத்திய தஸ்ஸம் ந்ருணாம்' என்றும் ஶாஸ்த்ரங்கள் சொல்லுகிறபடியே தத்வஜ்ஞாநாதிகரான இவருக்கு துக்கமயங்களாய் தோன்றுகையாலே அவ்விஷயாநுபவங்களை எல்லாம் விட்டு தாரேஷணை, புத்ரேஷணை, அர்த்தேஷணை, என்கிற அவ்விஷய வாஸனைகளையும் விட்டு 'ஸாவோ நாந்யத்ரு ஶ்ருதி' என்றும், 'இச்சுவை தவிர யான் போய்' என்றும், 'காதலின்ப மாகுமே' என்றும், சொல்லுகிறபடியே பகவத் குணாநுபவைக போகராய் எழுந்தருளி யிருக்கச் செய்தேயும் அபார கருணாம்புதியான ஸர்வேச்வரன் 'ஆவாரார் துணை என்றலை நீர்க் கடலுள் அழுந்தும் நாவாய்போல் பிறவிக் கடலுள் நின்று நான் துளங்க' என்கிறபடியே ஸம்ஸாரஸமுத்ரத்தில் மூழ்கிக் கரைசேரும்வழியறியாதே கிடக்கிற ஸம்ஸாரிகளுடைய உஜ்ஜீவநத்தில் நித்யமாய் உத்யுக்தனான ஸர்வேச்வரனுடைய ஸாக்ஷாந் நியமநத்தினாலே ஸர்வ ஜன ஸம்ரக்ஷண யஜ்ஞ தீக்ஷிதனாய் சிங்கவேள் குன்றத்தில் நித்யவாஸ ரஸிகனாய் அர்ச்சாரூபியாய் எழுந்தருளியிருக்கும் ஸமயத்திலுங்கூட 'அகலகில்லேனிறையும்' என்கிறபடியே 'மா மலராள் மன்னியுறை' மடியையுடையனாய் திருவடியை விட்டகலாத மரவடி ரூபனான திருவநந்தாழ்வானோடும் நித்ய ஸஞ்சரண ப்ரவ்ருத்தனான அச்சிங்கவேள்குன்றத் தெம்பெருமானையும் அவ்வெம்பெருமானுடைய விபூதிகளான கஜ துரக பரிஜன பரிச்சதாதிகளையும் எழுந்தருளப் பண்ணிக்கொண்டு மழை, வெய்யில், காற்று, பனிகளினால் உண்டாகும் கஷ்டங்களை எல்லாம் ஸர்வதா ஸஹித்துக் கொண்டு 'கள்ளியுணங்கும் வெங்கானதரிடைகளெல்லாம்' தமது பொன்னடி நோக நடந்து பஹுபக்ஷகனாகையினாலே 'பபஸ:' என்று ப்ரஸித்தனான அச்சிங்கப்பிரானையும் கஜ துரக பதாதிகளான அவ்வெம்பெருமானுடைய பலவிதங்களான விபூதிகளையும் அநுதினமும் ஷோடசோபசாரங்களினால் ஸம்பூர்ணமாக ஆராதித்து அதனாலேயே பிக்ஷுகனான தன்னை தந்யம் மன்யனாக பாவித்திருந்ததினாலும் இவ்வுலகத்தில் 'இடகில்லேன் ஒன்றட்டகில்லேன்' 'தவத்துளார் தம்மிலல்லேன்' என்றும் 'ஆழியான் தன் திறத்தோரன்பிலா வறிவிலாத நாயினேன்' என்றும், 'அக்ருதஸுக்ருத:' என்றும் சொல்லுகிறபடியே ஸுக்ருத லேச ஸம்பாவனை யில்லாதவர்களாய் ஸுதுஷ்க்ருத்தரமான 'சூதினைப் பெருக்கி கொன்றேன் பல்லுயிரை' 'நானே நானாவித நரகம் புகும் பாவம் செய்தேன்' என்கிறபடியே பஹுவிதங்களான பாபங்களையும் செய்து வைக்கையாலே பூமி பாரங்கள் என்று சொல்லும்படியான பாபிஷ்டர்களையுங்கூட அநாதரியாதே தாமே அம்மானிடரிருக்குமிடமெல்லாம் சென்று 'ந நமேயம் து கஸ்யசித்' என்றிருப்பவர்கள் திருமுடிகளை, தேவரும் முனிவரும், வணங்கி வாழ்த்தும் அச்சிங்கப்பிரான் திருவடிகளில் வணக்கி அவர்களையுங்கூட அவ்வெம்பெருமான் கடாக்ஷத்திற்குப் பாத்ரமாக்கி 'க்ஷிப்ரம் பவதி தர்மாத்மா'

என்கிறபடியே அவர்களையும்கூட தமது உபதேச மஹிமையினால் பரம பாகவதர்களாக திருத்திப் பணி கொண்டு அவர்கள் உஜ்ஜீவித்துப் போகும்படி செய்வதினாலும் தமக்குப் பிற்காலத்திலும் இவ்வுலக மிருக்கும் காலம் வரையிலும் ஸத்த ஸம்ஸாரிகளுக்கும் பரம புருஷார்த்த ப்ராப்திக்கு ஹேதுவான இம் மஹாகைங்கர்யம் நிரந்தரமாக நடந்து அவ்வெம்பெருமான் திருவுள்ளம் மிகவும் உகந்திருக்கும்படி சிஷ்ய பரம்பரையை சாச்வதமாக இருக்கும்படி ஏற்படுத்தி வைத்ருதிந்ததாலும் ஸ்ரீ ஆதிவண்சடகோபயதீந்த்ரமஹாதேசிகன் இவ்வுலகத்திற்கு செய்தருளிய உபகாரம் நிகரற்றதாகிறது.

ஸ்ரீ:

பஞ்சாங்க ஸங்க்ரஹம்

விக்ருதி-ஹூ தை-மீ [1951-ஜனவரி-பிப்ரவரி-மீ]
[உத்தராயணம்-ஹேமந்த ருது, மகர-மீ]

14—1—51 தைமீ 1உ ஞாயிற்றுக்கிழமை மகர ரவி. 6-22.
உத்தராயணபுண்ய காலம். தநுர் மாஸாராதந பூர்த்தி.
15—1—51 2-உ திங்கட்கிழமை ... கனு,பாரிவேட்டை
18—1—51 5-உ வியாழக்கிழமை ... ஸர்வ ஏகாதசி வ்ரதம்,
[பீஷ்ம ஏகாதசி.
19—1—51 6-உ வெள்ளிக்கிழமை ... த்வாதசி ஹரிவாஸரம் 10-10.
21—1—51 8-உ ஞாயிற்றுக்கிழமை ... திருவாதிரை.
ஸ்ரீ-அ-மடம் 38-ம் பட்டம்ஸ்ரீஸ்ரீநிவாஸயதீந்த்ரமஹாதேசிகன் திருநக்ஷத்ரம்.
24—1—51 11-உ புதன்கிழமை ... த்விதீயை திதி அநத்யயநம்
25—1—51 12-உ வியாழக்கிழமை ... மகம் -திருமழிசைப்பிரான்
[திருநக்ஷத்ரம்
27—1—51 14-உ சனிக்கிழமை ஸ்ரீ அஹோபிலமடம் மாலோலவித்வத்
ஸபையின் 10-வது வார்ஷிக ஸதஸ் ஆரம்பம்.
28—1—51 **15**-உ ஞாயிற்றுக்கிழமை ... ஹஸ்தம் - கூரத்தாழ்வான்
[திருநக்ஷத்ரம்.
2—2—51 20-உ வெள்ளிக்கிழமை ... ஸர்வ ஏகாதசி.
3—2—51 21-உ சனிக்கிழமை ... த்வாதசி- மஹாப்ரதோஷம்
4—2—51 22-உ ஞாயிற்றுக்கிழமை ... த்ரயோதசி28-15அத்யயநம்.
5—2—51 23-உ திங்கட்கிழமை ... போதாயந அமாவாஸ்யை.
... [மஹோதய புண்யகாலம்.
ஸ்ரீ-அ-மடம் 42 வது பட்டம் இஞ்சிமேடு ஸ்ரீ ஸ்ரீரங்க
சடகோபயதீந்த்ர மஹாதேசிகன் திருநக்ஷத்ரம்.
6—2—51 24-உ செவ்வாய்க்கிழமை ... அமாவாஸ்யை, ப்ரதமை
]திதித்வயம்
11-2—51 29 உ ஞாயிற்றுக்கிழமை ... மகர சுக்ல ஷஷ்டி திதி.
12-2—51 30-உ திங்கட்கிழமை அதிதி, கும்பரவி 33-38, விஷ்ணுபதி,
(இன்று ஸங்க்ரமண தர்ப்பணம்.)

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

உபய வேதாந்த ஜககண்ட்யம்

[ஐப்பசி மாஸத்து ஸஞ்சிகையின் தொடர்ச்சி]

[ஸ்ரீ. உப. A. V. கோபாலாசார்ய ஸ்வாமி, M.A.,B.L., அட்வோகேட். திருச்சி.]

நின்றன ரிருந்தனர் கிடந்தனர் திரிந்தனர்
நின்றில ரிருந்திலர் கிடந்திலர் திரிந்திலர்
என்றுமோ ரியல்வின ரெனநினை வரியவர்
என்றுமோ ரியல்வொடு நின்றவெந் திடரே.

[திருவாய்மொழி **1-1-6**]

இப்பாசுரத்தில் நாலாம் பாத விஷயங்களின் ஸூசநம். 4, 5, 6, இம் மூன்று பாசுரங்களிலும், ஜீவர்கள் தேவர்கள் அசேதநங்கள் முதலிய சிதசித் ப்ரபஞ்சம் முழுவதையும் ப்ரஹ்மத்தோடு ச்ருதியின் ரீதியில் ஸமாநாதிகரணமாக ஒன்றுபோலவே பேசி இப்படி ஒன்றுபோல் பேசுவதற்கு உயிருமுடலுமாயுள்ள விசிஷ்டைக்யமே காரணமென்னும் ஸித்தாந்ததத்வத்தை ஸூசிக்கிறார். இந்தப் பாதத்தில் முதல் ஆநுமாநிகாதிகரணத்தில் கடோபநிஷத்தை விசாரித்து, அதில் 'மஹத் தத்வத்திற்கு மேற்பட்டது அவ்யக்தம்; அவ்யக்தத்திற்கு மேற்பட்டது புருஷன்; புருஷனுக்கு மேற்பட்டது ஒன்றுமில்லை' என்று பணித்திருப்பதால், 'ஸாங்க்யர்கள் மதமே ச்ருதியால் ஆதரிக்கப்பட்டுள்ளது; அவர்கள் சொல்லும் மூலப்ரக்ருதி என்கிற ஸ்வதந்த்ரமான அவ்யக்தம்தான் ஜகத்திற்குக் காரணம்' என்ற ஸாங்க்யர் பூர்வ பக்ஷத்தைத் தள்ளி, அங்கே சொல்லப்படும் அவ்யக்தம் என்பது அசேதநமான அவ்யக்தத்தின் பரிணாமமான நம் சரீரம்தான் என்று விளக்கப்பட்டது. சரீரமென்பது ஜீவனுக்குப் புருஷார்த்தங்களுக்கு ஸாதநமான ஓர் ரதமென்றும், அந்த ரதத்தில் இந்த்ரியங்கள் குதிரைகள் என்றும், மநம் கடிவாளமென்றும், புத்தி ஸாரதி என்றும், இந்த்ரிய விஷயங்களான போக்யங்கள் சரீரரதம் ஸஞ்சரிக்கும் தேசங்கள் என்றும், இந்த்ரியக் குதிரைகள் அடங்காத துஷ்ட முரடுகளாயிருந்தால் அங்குமிங்கும் பக்கங்களிலும் பின்புறமும் ரதத்தையும் அதில் உள்ளவனையும் தள்ளிக்கொண்டு செல்லவேண்டிய கடைசி இடமாகிய விஷ்ணு பதத்திற்குச் சேர முடியாமல் விபரீதமான இடங்களுக்குத் தள்ளிக்கொண்டுபோகுமென்றும், இந்த்ரியங்கள் பரமபுருஷ த்யாநத்திற்கு யோக்யமாக நமக்கு அடங்கி வசப்பட்டு இந்த்ரிய மநோ புத்திகள் பகவத் த்யாநத்திற்கு ஸஹகாரிகளா யிருந்தால் இந்த சரீர ரதம் ப்ரக்ருதி மண்டலத்தைத் தாண்டி யடையவேண்டிய விஷ்ணு பரம பதத்திற்குச் சேர்த்து வைக்குமென்றும் விஸ்தாரமாய் நிரூபிக்கப்பட்டது.

இந்த ரத ரூபகத்தி லுள்ள சரீரத்தின் ஸ்தாநத்தில் அவ்யக்த மென்பதை ஸாங்க்யர்கள் ஆதரிக்கும் மேற்கூறிய வாக்யத்தில் மஹானென ஆத்மா வென்று கூறப் பட்ட ஜீவனென மஹத்திற்குப் பரமாகக் கூறப்பட்டதால், அது சரீரம்தான் என்று ஸித்தாந்த விளக்கம். அவ்யக்தத்திற்குப் பரமாக இங்கே சொல்லப்பட்ட புருஷன் பரமபுருஷனே ;ஜீவனல்ல ; ஜீவனுக்கும் பரமாக சரீரத்தைக் கூறியதற் குக் காரணம் சரீரம் முக்தி ஸாதக யோக்யமாய் வஶப்படாவிடில் ஜீவனுக்கு மோக்ஷம் ஸித்தியா தென்பது. சரீர ரதம், இந்த்ரியக் குதிரைகள், மநக் கடிவாளம், புத்தி ஸாரதியெல்லாம் மோக்ஷாநுகூலமாக நமக்கு வஶப்படுவதற்கு, பரமாத்மாவை நமக்கு அநுகூலமாக வஶப்படுத்திக்கொள்ளவேணும். சரீரம், இந்த்ரியம், மநஸ், புத்தி முதலிய எல்லாவற்றின் ஸர்வ ப்ரவ்ருத்தி நிவ்ருத்திகளும் பரமபுருஷாதீநமா கவே யிருப்பதால், அவனை வஶப்படுத்தாமல் ஒன்றும் நடக்காது. இதையெல்லாம் நமக்கு வஶமாக்குவதற்கென்றே இந்த சரீர ரதத்தில் அவனும் கூட மநோ புத்தி ஸ்தாநமான ஹ்ருதய குஹையில் அநாதி காலமாய் ஜீவனோடு பிரியாமல் வஸித்துக் கொண்டு, இவனை ஸம்ஸாரக் கரை யேற்றக் கங்கணம் கட்டிக்கொண்டிருக்கிறா னென் பது இந்த கடோபநிஷத்தில் உள்ள குஹா ச்ருதிகளாலும், ‘ गुहां प्रविष्टा வாத்மாநௌ’ என்கிற ஸூத்ரத்தாலும் விளக்கப்பட்டிருப்பதால், இத்தனை கருணை யோடும், ஆவலோடும் நம்முடைய அபிமுக பாவத்தை ப்ரதீக்ஷித்துக்கொண்டிருக் குமவனை ரக்ஷகனாக ஶரணவரணம் செய்தால் அவன் தேஹேந்த்ரியாதிகளை நம் ஆத் மாவுக்கு ஹிதமான மோக்ஷ மார்க்கத்தில் செல்லும்படி செய்துவைப்பது திண் ணம்.

ஸாங்க்யர்கள் சொல்லுகிறபடி ப்ரக்ருதியே ஸ்வதந்த்ரமாக அகஸ்மாத்தாக ப்ராணிகளின் போகத்திற்கும் மோக்ஷத்திற்கும் வ்யாபரிக்கிற தென்பது ஸங்கத மல்ல.

நமக்கு பந்தகமா யிருக்கும் அந்த ப்ரக்ருதி காருணிகனும் நமக்கு ஸர்வ வித பந்துவுமான ஈச்வரனுக்கு அதீநமா யிருந்தால்தான் நமக்கு அவன் கருணை யால் ப்ராக்ருதசரீரேந்த்ரியாதிகள் வஶப்பட்டு மோக்ஷமார்க்கத்தில் இறங்கிக் கடைத் தேற வழி யுண்டு. ‘ तदधीनत्वादर्थवत् ’ என்கிற இந்த அதிகரண ஸூத்ரத் தால் ப்ரக்ருதியும் அதன் பரிணாமங்களான சரீராதிகளும் ஈச்வரனுக்கு அதீநமா யிருப்பதால்தான் நமக்குப் புருஷார்த்தங்கள் ஸித்திக்க வழியுண் டென்றும் ஈச்வ ரனால் அதிஷ்டிதமாக இல்லாவிடில் ப்ரக்ருதி ஸ்வயமாக ப்ரவ்ருத்திக்கவே யோக்ய தையில்லை யென்றும் விளக்கப்பட்டது.

பரமபுருஷன் நம்மை ப்ரியதமனாக வரித்து நாம் அவர் விஷயமான யோக த்யாநாதிகளில் இறங்கும்படி தாமே கருணையால் ப்ரவ்ருத்திக்கிறாரென்றும், ப்ரிய தமராக நாம் அவரை வரித்து அவர் நம்மை வரிக்கும்படி. யோக்யராகவேண்டு மென் றும் முதல் அதிகாணம் லகு ஸித்தாந்தத்தில் விளக்கியதை யநுஸரித்து, இங்கும் ஶரண வரணத்தால் பரமபுருஷனை நாம் வசீகரணம் செய்யவேண்டு மென்று ஸாதிக் கப்பட்டது.

இரண்டாம் அதிகரணத்தில், அஜை யென்னும் மூல ப்ரக்ருதி ஈச்வரனால் அதிஷ்டிதமாய்த்தான் வ்யாபார யோக்யமாகிற தென்று ஸாதிக்கப்பட்டது. ‘ஜ்யோதிருபக்ரமாத்து’ என்கிற ஸூத்ரத்தால், ப்ரஹ்ம ஜ்யோதிஸ்ஸால் ஆக்கி நியமிக்கப்படுகிறது ப்ரக்ருதி என்று ஸாதிக்கப்பட்டது.

அடுத்த 3-ம் அதிகரணத்தால் ‘எந்த ப்ரஹ்மத்தினிடத்தில் பஞ்ச பஞ்சஜநங்களும் ஆகாசமும் ப்ரதிஷ்டை பெற்றிருக்கின்றவோ அந்த் ப்ரஹ்மத்தையே சிந்தநம் செய்யவேணும்’ என்கிற வாக்யத்திற்கு ஸாங்க்யர்கள், ஐயைந்து:25-தத்வங்கள்தான் என்று சொல்லும் பொருளை நிரஸித்து, அந்த வாக்யத்திலே சொல்லும் ப்ராண சக்ஷுஸ் ச்ரோத்ராதி பஞ்சகத்திற்கும் ஆகாசாதிகளுக்கும் பரமாத்மாவே ஆச்ரய மென்ற பொருள் விளக்கப் பட்டது. அதனால் இந்த்ரியங்கள், மநஸ் முதலியவைகள் பரமாத்மாவுக்கு அதீநமானபடியால் அவருடைய க்ருபையைத் தேடவேண்டியதின் அவசியம் விளக்கப்பட்டது. ப்ராணிகள் நிற்பதும் இருப்பதும், கிடப்பதும், ஸஞ்சரிப்பதும் இந்த வ்யாபாரங்களின் நிவ்ருத்தியும் ஆக மொத்தத்தில் ப்ராணிகளுடைய ஸகல ப்ரவ்ருத்தி நிவ்ருத்திகளும் ஈச்வராதீநம். அந்த ப்ரவ்ருத்திகளுக்கு அவச்யாபேக்ஷிதங்களான ப்ரக்ருதி ப்ராக்ருத தேஹேந்த்ரியாதிகளும் பரமாத்மாவுக்கே அதீநமென்பது இந்த அதிகரணங்களால் நன்கு விளக்கப்படுவதை முதல் இரண்டடிகளாலும் ஸ்பஷ்டமாய் விளக்கப்படுகிறது. கிடப்பதென்பது’ நித்ரா சயநத்தையும் சொல்லும். ‘கிடந்திலர்’ என்பது நித்ரையிலிருந்து எழுந்திருப்பதையும் சொல்லும். இந்த நித்ரையும் பரமாத்மாவெனும் ஆதாரத்தில் அவனால் அணையப்பட்டுக் கிடப்பதுதான் என்பது, 6-வது அதிகரண விஷயமான பாலாக்யஜாதசத்ரு ஸம்வாதத்தில் ‘இந்த ஜீவன் எங்கே தூங்குகிறான்?’ என்று கேட்டு, ‘ப்ராண னென்னும் பரமாத்மாவில் ஒன்று சேர்த்து அணைக்கப்பட்டுத் தூங்குகிறான்; ஹ்ருதயத்திற்குள் உள்ள தஹராகாசமென்னும் பரமாத்மாவினிடம் தூங்குகிறான்’ என்ற பதில்களால் விளக்கப்படுகிறது. மூன்றாம் அத்யாயம் இரண்டாம் பாதத்தில், ‘தூங்கும் ஆதாரமான இடம் பரமாத்மா வென்றும், திரும்பி எழுந்திருப்பது பரமாத்மாவினிடமிருந் தென்றும்,’ இரண்டு அதிகரணங்களால் விளக்கப்பட்டது. நம்முடைய கர்த்ருத்வஸாமாந்யமும் பரமாத்மாதீநம் என்பது, இரண்டாம் அத்யாயம் மூன்றாம் பாதத்தில் பராயத்தாதிகரணத்தில் விளக்கப்பட்டது. முதல் இரண்டடிகளும் இதையெல்லாம் ஸூசிக்கிறது.

4 வது காரணத்வாதிகரணத்தில், ‘காரண வாக்யங்களில் ஸத் என்றும் அஸத் என்றும் பலவிதமாகக் காரணப் பொருளைக் குறித்திருந்தாலும் ஸர்வஜ்ஞனை ஸர்வேச்வரன்தான் எல்லா வாக்யங்களிலும் கூறப்படுகிறான். அஸத் என்று காரணத்தைக் கூறியவிடத்திலும் அதற்குமுன் கூறப்பட்ட ஆநந்தமய ப்ரஹ்மம் ஆசைப்பட்டு ‘பகுவாக ஆவேன்’ என்று ஸங்கல்பித்து ஸ்ருஷ்டித்ததென்று கூறப்பட்ட ஆநந்தமயப்ரஹ்மத்தையே குறிக்கிறதென்றும், நாம ரூபங்களெல்லாம்

தன்னுள் லயித்திருக்கும் தசையை யுத்தேசித்து ப்ரஹ்மத்தை ‘ அஸத் என்ற பெயராலும் ‘அவ்யாக்ருதம்’ என்ற பெயராலுங் குறிக்கின்றன வென்றுங் காட்டப்பட்டது. ப்ரளய காலத்தில் அவ்யாக்ருத நாம ரூபராயும், ஸ்திதி காலத்தில் வ்யாக்ருத நாம ரூபராயும் இருப்பதால் ‘ என்றுமோ ரியல்வினர் எனநினைவரியவர் ’ என்கிற மூன்ரும் அடியால் காட்டப்படுகிறது.

அடுத்த ஜகத்வாசித்வாதிகரணத்தில் ஜகத்தே அவரால் ஸ்ருஷ்டிக்கப்பட்டதென்பதைக் காட்டுகிறது. அடுத்த வாக்யாந்வயாதிகரணத்தில், பார்யா புத்ர வித்தாதிகள் நமக்குக் கொடுப்பதாக நாம் நினைக்கும் ஸந்தோஷங்களெல்லாம் நம்மிடத்தில் பித்ரு மாத்ரு வாத்ஸல்யமுடைய பரமாத்மாவின் ஸங்கல்பத்தாலும் அவர் ஆசைக் காதலாலும், பரமாத்மா பார்யா புத்ராதிகளுக்குள் ஆத்மாவாய் நின்று தத்ரூபமாய் இருப்பதாலும், அவருடைய ஆநந்த இனிப்பே பார்யா புத்ராதி வ்யாஜங்களால் நமக்குக் கிடைக்கிறது; தேவர்களை ஆச்ரயிப்பதில் பரமாத்மாவிடமிருந்து பல மடைவது போல அவன் அவற்றில் ஆத்மத்வேந அவஸ்திதனில்லாவிடில் அவை இனிப்பைக் கொடுக்கவல்லவையல்ல என்று விளக்கப்பட்டது

‘நின்றவெந்திடரே’ என்பதில் ‘நின்ற, என்ற பதத்தால் ‘𑌅𑌵𑌸𑍍𑌥𑌿𑌤𑍇𑌃’ என்ற ஸூத்ரத்தையும், அந்த ஸூத்ரத்தால் ஸூசிக்கப்படும் ‘𑌯 𑌆𑌤𑍍𑌮𑌨𑌿 𑌤𑌿𑌷𑍍𑌠𑌨𑍍’ என்கிற ப்ருஹதாரண்யகாந்தர்யாமி ப்ராஹ்மணத்தையும், ஸர்வாத்மாவான பரமாத்மா உள்ளே நியமிக்கும் ஆத்மாவாக நிற்பதால்தான் எல்லா சேதநாசேதநங்களுடைய நிற்றல், இருத்தல், கிடத்தல், திரிதல் முதலிய ஸகல ப்ரவ்ருத்தி நிவ்ருத்திகளும் நிகழ்கின்றன வென்றும், அவர் ஆத்மாவாய் உள்ளிருந்து எல்லாவற்றையும் நடத்துவதால் சேதநாசேதநங்களையும் அவரையும் ஸமாநாதிகரணமாக ச்ருதி பேசுகிறதென்றும் விளக்குகிருர். பரமாத்மா உள்ளே நிற்பதால்தான் 25-வது தத்வமான ஜீவனையும் பரமாத்மாவையும் ஒன்று போல ச்ருதிகள் பேசுவதென்று யாஜ்ஞவல்க்யர் ஜநகருக்குக் கூறிய

‘𑌅𑌨𑍍𑌯𑌶𑍍𑌚 𑌰𑌾𑌜𑌨𑍍 𑌸 𑌵𑌰𑌸𑍍𑌤𑌥𑌾𑌨𑍍𑌯𑌃 𑌪𑌞𑍍𑌚𑌵𑌿𑌂𑌶𑌕𑌃 ।
𑌤𑌤𑍍𑌸𑍍𑌥𑌤𑍍𑌵𑌾𑌦𑌨𑍁𑌪𑌶𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 𑌹𑍍𑌯𑍇𑌕 𑌏𑌵𑍇𑌤𑌿 𑌸𑌾𑌧𑌵𑌃 ॥’

என்கிற மோக்ஷ தர்ம வசநத்தையும் ஸூசிக்கிருர். ‘[illegible]’ ‘𑌯𑌤𑌃 𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌰𑍍𑌭𑍂𑌤𑌾𑌨𑌾𑌂 𑌯𑍇𑌨 𑌸𑌰𑍍𑌵𑌮𑌿𑌦𑌂 𑌤𑌤𑌮𑍍’, ‘𑌈𑌶𑍍𑌵𑌰𑌃 𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌾𑌨𑌾𑌂 𑌹𑍃𑌦𑍍𑌦𑍇𑌶𑍇𑌽𑌰𑍍𑌜𑍁𑌨 𑌤𑌿𑌷𑍍𑌠𑌤𑌿 । 𑌭𑍍𑌰𑌾𑌮𑌯𑌨𑍍 𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌾𑌨𑌿 𑌯𑌨𑍍𑌤𑍍𑌰𑌾𑌰𑍂𑌢𑌾𑌨𑌿 𑌮𑌾𑌯𑌯𑌾 ॥’ முதலிய இப்பாசுரப் பொருள்களை விளக்கும் கீதா வசநங்கள் ஸூசிக்கப்படுகின்றன. உலகத்தில் ஸர்வகாலமும் ஸர்வ ப்ரவ்ருத்தி நிவ்ருத்திகளும் இவரும்கூட உள்ளே முழுவதும் நிரம்பிக் கூடியிருந்து நடந்தாலும், ‘𑌸𑌦𑍈𑌕𑌰𑍂𑌪𑌰𑍂𑌪𑌾𑌯’ என்றபடி இவர் ஈஷத்தேனும் விகாரமடையாமல் ‘ என்றுமோ ரியல்வொடு ’ நிற்பதை நான்காவது அடியில் விளக்குகிருர்.

(தொடரும்)

ஸ்ரீ:

श्रीमते लक्ष्मीनृसिंहपरब्रह्मणे नमः ॥

ஸ்ரீ ஆசார்யாப்யுதயம்

[ஸ்ரீ. உப. வித்வான் தூப்புல் நரஸிம்ஹாசார்ய ஸ்வாமி, ப்ரஹ்மதேசம்]

प्रथमः सर्गः ॥

1 काव्यं प्रसक्तः कविसार्वभौम[illegible]पाण्डित्यविशेषभाजः ।
उपायनानि स्वकरे पदाब्जसंसेवितुं तं [illegible] ॥

2 प्रणम्य पादाब्जयुग्मं तदीयं समर्प्य सोपायनमग्रजातः ।
[illegible] निराजतेऽसौ ॥

3 [illegible] ।
[illegible] ॥

4 [illegible] ।
[illegible] ॥

5 [illegible] ।
[illegible] ॥

6 [illegible] ।
[illegible] ॥

7 [illegible] ।
[illegible] विराजते ॥

8 [illegible] ।
[illegible] ॥

9 पद्मा इव [illegible] सततं समावृतः ।
[illegible] ॥

10 [illegible] ।
[illegible] ॥

11 लोकत्रये सतत[illegible] ।
[illegible] ॥

12 [illegible] ।
[illegible] ॥

13 [illegible] ।
[illegible] ॥

14 [illegible] ।
[illegible] ॥

15 [illegible] ।
[illegible] ॥

16 [illegible] ।
[illegible] ॥

17 [illegible]
[illegible] ।
[illegible]
[illegible] ॥

18 [illegible]
[illegible] ।
[illegible]
[illegible] ॥

19 [illegible]
[illegible] ।
[illegible]
[illegible] ।

20 [illegible]
[illegible] ।
[illegible]
[illegible] ॥

21 [illegible]
[illegible] ।

ஸாஹித்ய வாரத்ரஸ்வாzzமகைகோடிரஸாஸ்வாதத³க்ஷ: கவீஶ:
ஶாந்த்ஸ்ராஸ்த்ருப்ரவீணோ மாராதிமக ஹவாநு கஸ்ய்தே ஸவடுமோரமெக: ॥

22 ரூஶாஸ்வடீா விபவிபோ: கரவடுதெ கீதடியஷேஷ
ரூஶாஸ்வடீா ஹாவி தவ ந்ருணாம் வடிராயஶி ப்ரஸாதா: ।
ரூஶாஸ்வடீா கபீ்ருதவிஷயெ தெ த்ருஜதி ஸ்வகீயா:
ரூஶாஸ்வடீாஸ்தவ தா வசநெ யெ பாயா நிக்ஷிவதி ॥

23 ஸ்ஃராஹம் ஸ்ஃராஹம் ஹ்ருதயஜலஜெ க்வ த்யாம் வாணஞ்ஶீலா:
தஶாடும்தஶாடும் நயநமௌஷம் தெ பாநெ தீவப்ராலிவடு ।
வாயம்வாயம் வரணஸலிலம் வாவநம் ஜாஹ்நவீவக
மாஹம்மாஹம் ப்ரதீஜமயள வதடுபோநா வயம் ஹொ ॥

24 ஸ்ராஷ்ட்ராஸ்வம் ஶ்ரிதநந்தந்தஸ்வாஸ்ஶ்ரிதஸ்வாஸ்தாபிநோமணெஷு ।
நதாமீர்தப்ராயவமவப்ரதாநாத்ர்ருக்தம் ஹி விக்ருஜயாவெவிடுஹீந: ॥

25 ஹொகும்மவெத யதிவா நவெதிவ ப்ராதிவஸதிவடுதீ ஸம்ஶ யெந வெ ।
நியதம் ஹவாஸ்நபதிவாயடு தெ மணாஹவிபாய்தெ விவியஶாஸ்த்ரவெத்ர
[வி ॥

26 கபாநா யதிநாவதிநா க்ருய்ஞாயடீாவஜெயாமதபிநா ।
வதயாமநதவாயததிநா க்ருதிநா ஸவலெதவ நாயவஞஸ்வ: ॥

27 க்வம் பநாஷெ மாம்மெயம் தர்ணவஸ்லவெடுஜடுநெஸ்லதா யெர்யடு ।
பஹாபநாஷெ *மாம்மெயம் மாராவகபீாயடுவெதிஹிமெடுயடு ॥

28 நெபீடுவ்யம் ஶஶஹர்க கவீயஹர்தயெ தர்ஷ்டா பஹஷெடுஹடுர்த:
ஸம்ஹாரிதஸ்ய நமெzஹ்தி நிபீடுமதநாபீடுக்வா விஷாதம் மத: ।
வாவாம் தெ வ வினாஸரீதிபதாபாம் தர்வெஷ்ணுவ ஸா ஹாரதீ
வீநா காநநமஹ்வரெ நிவஸதீதெ்ருதஶிவிக்ரும் பஹக ॥

29 யாதாமெஸ்ரவாஸ்லாதரிரம் விமதநிஜபதா யெஷிணா: காவிலாஷ்டே
களத்ராரணப்ரவெஶா ஜிநபதபிவிலம் க்ராவி ஸம்வீ நபோஸீக ।
ஶாகெதயாநாதா பாமெடுா விவிநதவிஹெஷ்நாபதஶ்லெஷபோஸீக
கமெவதம் யோமிவடு கவியி யதநவமெ நெநமமாசுடீாநு ப்ரவக்தாடு ॥

(தொடரும்)

* மாம்மெயம் - ஹிரண்யம் மாம்மெயம் - ஸீஷாவாயடும்

ஶ்ரீ:

ஶ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

ஆஸ்திக்யம்

(சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

கைகளினால் வஸ்த்ரங்களைத் தரித்தும் ஆஹாரங்களை ஸுகமாகப் புஜித்தும் படுக்கைகளை ஸுகமாக ஏற்படுத்திக்கொண்டும் காற்று அதிகமாக அடிக்காமலும் ஸுகத்தை அநுபவிக்கிறார்கள். கைகளிருப்பதால் எருதுகள் குதிரைகளின் மேல் ஏறிக்கொண்டு, நடந்து ச்ரமப்படாமல் க்ராமாந்தரம் போகிறார்கள். எங்களைப் போல் கைகளில்லாத ப்ராணிகள் கீழே சொல்லப்பட்ட துக்கங்களையெல்லாம் ஸஹித்திருக்கின்றன. மற்றும் தவளைகள்போல் நாக்கில்லாத ப்ராணிகள் பேச முடியாமல் கஷ்டப்படுகின்றன. நீ முன் ஜந்மத்தில் செய்த பாக்ய விசேஷத்தினால் இப்படிப்பட்ட கஷ்டங்களை அநுபவிக்காமல் கைகளோடும் நாக்குடனு மிருக்கிறாய்] என்று சொன்னதுபோல சிற்சில இந்த்ரியங்க ளில்லாமையினால் ச்ரமப்படுவதை அறிகையும்—

திர்யக்குகளுக்குள் 'ஜீவோ ஜீவஸ்ய ஜீவநம்' என்கிறபடியே எலிகளைக் கீரிப்பிள்ளை கொன்று தின்பதையும் கீரிப்பிள்ளையைக் காட்டுப்பூனை தின்றுவிடுவதையும் அந்தப் பூனையை நாய் தின்பதையும் நாய்களைப் புலி தின்பதையும் பார்த்து, எது நம்மை எப்பொழுது கொன்றுவிடுமோ என்று ஸதா அவைகள் நெஞ்சு நடுங்கியிருப்பதை அறிகையும்—

இப்படி திர்யக்குகள் பகுத்தறிவில்லாத ப்ராணிகளா லுண்டாகிற துக்கங்களை அநுபவித்திருப்பது மாத்திர மன்றிக்கே 'விஜ்ஞாநமேகமதிகம் நராணாம்' என்கிறபடியே மனிதனாகப் பிறந்தவன் திர்யக்குகளுக் கில்லாத சாஸ்த்ர ஜ்ஞாந மாகிற அதிக ஜ்ஞாநத்திற்கு யோக்யனாகையினாலே

'கஜோஷ்ட்ர கர மர்கடாகு ஸரீஸ்ருபவிசக்ஷிகா: ।
ஸுக்ஷேமஸுகவந்த்யேதே ஸ்வஸ்த்யேஷாமேவ நிஶ்சய: ॥'

[யானை ஒட்டகம் கழுதை குரங்கு எலி பாம்பு ஈ இவைகளையும், தான் தன் புத்திரன் கஷ்டப்படாமல் ஸுகமாக இருக்கவேண்டு மென்று தீர்மானித்திருப்பது போல, கஷ்டப்படாமல் ஸுகமாக இருக்க வேண்டு மென்று மனிதனாகப் பிறந்தவன் நிச்சயித்திருக்க வேண்டும்] என்று பாகவதம் 11–வது ஸ்கந்தத்தில் உத்தவ கீதையில் பகவான் அருளிச் செய்திருப்பதால், அதை அநுஸரித்து மனிதன் ஸர்வ ப்ராணிகளிடத்திலும் ஹிம்ஸா ப்ரஸங்க மில்லாது 'லோகாஸ் ஸமஸ்தாஸ் ஸுகிநோ பவந்து' என்றிருக்கவும், நாம் ப்ராணிகளை ஹிம்ஸி[illegible] [illegible]விஹார ரஸஸ் நர: க்ருமிகீடேஷு ஜாயதே' [ப்ராணிகளை [illegible]ஹிம்ஸிக்கிறவன் புழுக்கீ[illegible]

189276

...களாகவும் பிறக்கிறான்] என்று பாரதம் அநுஶாஸந பர்வத்தில் 208-ம் அத்யாயத்தில் சொல்லியிருப்பதால் நாம் சாணியிலும் சாக்கடையிலும் புழுக்களாகப் பல ஜந்மங்கள் பிறந்து இறப்பதோடு 'கடுஞ் சொலார் கடியார் காலனார் தமர்கள் செய்யும் கொடுமிறை'களையும் அநுபவிக்கவேண்டுமே என்று நடுங்கின நெஞ்சோடிருக்கவேண்டியதும் உசிதமாக இருக்க, அப்படியிருக்காமல் 'தாநதி பராஷ்டி ஸத்ராநு' என்கிறபடியே ஸர்வ ப்ராணிகளையும் ஹிம்ஸித்து அவைகளின் மாம்ஸ ரக்த ஸாராம்ஶங்களினாலும் தான் வளர்த்த பசு பக்ஷி ஹிம்ஸை மூலமாகவும் தனது தேஹத்தை வளர்க்கிறவனாய் ஸர்வ திர்யக்குகளையும் கட்டவும் அடிக்கவும் சுடவும் ஹிம்ஸிக்கவும் சக்தியுள்ளவனா யிருக்கையாலே தன்னை உயர்ந்தவனாக நிச்சயித்திருக்கிற இக்காலத்து மனிதர்களுக்கு ஸர்வ திர்யக்குகளும் பராதீநங்களாயிருந்து வருந்துவதை அறிகையும்—

நன்றாக அறிவதாகும்.

இப்படி மழை வெய்யில் காற்று பனி முதலானவைகளால் உண்டான கஷ்டங்களையெல்லாம் ஸர்வதா ஸஹித்துக் கொண்டு 'பராபகாரை ஜீவிதாநு' என்கிறபடியே தன்னைத் திர்யக்குகளுடையவும் மனுஷ்யர்களுடையவும் ப்ரயோஜனத்திற்காகவே ஆக்கிக்கொண்டிருக்கிற மரஞ் செடிகளான ஸ்தாவரங்களையும், கைகளில்லாமையாலே தனது தேஹத்தின் மர்ம ஸ்தாநங்களில் பாய்ந்து கிடக்கும் முட்களை எடுக்க முடியாமலும், தனது தேஹ ரக்த மாம்ஸங்களை உண்டு ஸுகித்திருக்கும் பூச்சி புழுக்களையும் எடுக்க முடியாமலும், தங்களை அதிக ஶக்தியுள்ள திர்யக்குகளுக்கும் மனிதர்களுக்கும் ஆஹாரமாக்கிக் கொண்டுமிருக்கிற ஜங்கம ப்ராணிகளையும் மனிதர்களுடைய போகார்த்தமாகவே இருப்பதாக நினைத்து தான் ஸர்வ ஹிம்ஸகனாய் ஸர்வ பக்ஷகனாய் விளங்குகையாலே தன்னை உயர்ந்தவனாகத் தீர்மானித்திருக்கும் மநுஷ்ய ஜந்ம விஷயத்தில் நன்றாக அறிவதாவது:—

'ஸம்யதாஶ்சாபி தக்ஷாஶ்ச மதிமந்தஶ்ச மாநவா꞉ ।
த்ருஶ்யந்தே நிஷ்பலா꞉ ஸந்த꞉ ப்ரஹீணா꞉ ஸர்வகர்மபி꞉ ॥'

[இவ்வுலகத்திலிருக்கிற மனிதர்கள் புத்திமான்களாய் ஆரம்பித்த கார்யங்களை முடித்துவிடக்கூடிய ஸாமர்த்ய முள்ளவர்களாய் இந்த்ரியங்களை ஜயித்தவர்களாக இருந்தாலும் அவர்கள் ஆரம்பித்த கார்யங்கள் முடிவு பெறாமல் போகிறதைப் பார்க்கிறோம்.]

'ஸந்தி புத்ரா꞉ ஸுபஹவோ தரித்ராணாமநிச்சதாம் ।
நாஸ்தி புத்ர꞉ ஸம்ருத்தாநாம் விசித்ரம் விதிசேஷ்டிதம் ॥'

[தாரித்ர்யத்தினாலே தங்களுக்குக் குழந்தைகள் வேண்டாமென்று நினைத்திருக்கிறவர்களுக்கு மிகவும் அதிகமான குழந்தைகள் உண்டாகின்றன. அதிகமான ஐச்வர்யங்களோடு குழந்தைகள் தங்களுக்கு உண்டாகவேணுமென்று ஆசைப்படுகிறவர்களுக்குக் குழந்தைகள் உண்டாகிறதில்லை. தெய்வம் செய்கிற கார்யம் விசித்ரமாக இருக்கிறது.]

'𑌪𑍍𑌰𑌾𑌯𑍇𑌣 𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑌾𑌂 𑌲𑍋𑌕𑍇 𑌭𑍋𑌕𑍍𑌤𑍁𑌂 𑌶𑌕𑍍𑌤𑌿𑌰𑍍𑌨 𑌵𑌿𑌦𑍍𑌯𑌤𑍇 ।
𑌦𑌰𑌿𑌦𑍍𑌰𑌾𑌣𑌾𑌂 𑌹𑌿 [illegible] 𑌕𑌾𑌷𑍍𑌠𑌾𑌨𑍍𑌯𑌪𑌿 𑌜𑍀𑌰𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 ॥'

[அதிக ஐச்வர்ய முள்ளவர்களுக்குப் பெரும்பாலும் வீட்டில் ஆஹாரத்தைச் சாப்பிட்டு ஜரித்துக் கொள்ளக்கூடிய ஶக்தி இருப்பதில்லை. தரித்ரர்களுக்குப் பெரும்பாலும் கட்டை கல்லுகள் கூட சாப்பிட்டால் ஜரித்துப் போகின்றன.]

'𑌵𑍈𑌦𑍍𑌯𑌾𑌶𑍍𑌚 𑌵𑍍𑌯𑌾𑌧𑌿𑌤𑌾𑌸𑍍𑌸𑌨𑍍𑌤𑌿 𑌬𑌲𑌵𑌨𑍍𑌤𑌶𑍍𑌚 𑌦𑍁𑌰𑍍𑌬𑌲𑌾𑌃 ।
𑌶𑍍𑌰𑍀𑌮𑌨𑍍𑌤𑌶𑍍𑌚𑌾𑌪𑌰𑍇 𑌷𑌣𑍍𑌢𑌾 𑌵𑌿𑌚𑌿𑌤𑍍𑌰𑌃 𑌕𑌾𑌲𑌪𑌰𑍍𑌯𑌯𑌃 ॥'

[பிறருக்கு வைத்தியம் செய்கிறவர்கள் வ்யாதியினால் கஷ்டப்படுகிறார்கள். அதிகமான தேஹ பலத்தோடிருந்தவர்கள் பல மில்லாதவர்களாகப் போய்விடுகிறார்கள். தர்ம பத்நீ விவாஹத்தைப் புத்ரார்த்தமாகப் பண்ணிக்கொண்டவர்கள் நபும்ஸகராக ஆகிவிடுகிறார்கள். காலத்தின் பரிணாமம் விசித்ரமாக இருக்கிறது.]

'𑌦𑍃𑌶𑍍𑌯𑌤𑍇 𑌹𑌿 𑌯𑍁𑌵𑍈𑌵𑍇𑌹 𑌵𑌿𑌨𑌶𑍍𑌯𑌨𑍍𑌵𑌸𑍁𑌮𑌾𑌨𑍍𑌨𑌰𑌃 ।
𑌦𑌰𑌿𑌦𑍍𑌰𑌶𑍍𑌚 𑌪𑌰𑌿𑌕𑍍𑌲𑌿𑌷𑍍𑌟𑌃 𑌶𑌤𑌵𑌰𑍍𑌷𑍋 𑌜𑌰𑌾𑌨𑍍𑌵𑌿𑌤𑌃 ॥'

[இங்கு தநிகனாய் யௌவநத்தையுடைய மனிதன் மரித்துப் போகிறான். தரித்ரனாய்க் கிழவனாய் ஆஹாரத்திற்கும் ஹேதுவில்லாமல் கஷ்டப்படுகிற மனிதன் நெடுங்காலம் ஜீவித்திருக்கிறான்.]

'𑌨 𑌮𑍍𑌰𑌿𑌯𑍇𑌰𑌨𑍍𑌨 𑌜𑍀𑌰𑍍𑌯𑍇𑌰𑌨𑍍𑌸𑌰𑍍𑌵𑍇 𑌸𑍍𑌯𑍁𑌸𑍍𑌸𑌰𑍍𑌵𑌕𑌾𑌮𑌿𑌕𑌾𑌃 ।
𑌨𑌾𑌪𑍍𑌰𑌿𑌯𑌂 𑌪𑍍𑌰𑌤𑌿 𑌪𑌶𑍍𑌯𑍇𑌯𑍁𑌰𑍍𑌵𑌿[illegible] 𑌯𑌦𑌿 𑌨𑍋 𑌭𑌵𑍇𑌤𑍍 ॥'

[ஸர்வேச்வரன் ஒருவ னில்லாமற்போனால் மனிதர்கள் இறந்து போகமாட்டார்கள். கிழத்தன்மையை அடையமாட்டார்கள். எல்லா மனிதர்களும் தங்கள் இஷ்டப்படி ஸர்வ காமங்களையும் அநுபவிப்பார்கள். ஒருவித கஷ்டங்களையும் அநுபவிக்க மாட்டார்கள்.]

'[illegible] ।
[illegible] ॥'

[இன்றோ நாளையோ இறந்துபோகவேண்டியவனான மனிதனுக்கு நெடுங்காலம் கஷ்டப்பட்டு ஸம்பாதிக்கக்கூடிய தநங்களினாலும் பத்நிகளினாலும் புத்ரர்களினாலும் மற்றும் ப்ரியங்களான க்ருஹம், ஆராமம், க்ஷேத்ரங்களினாலும் என்ன பேரின்ப முண்டாகப் போகிறது? மனிதன் நெடுங்காலம் ச்ரமப்பட்டு ஸம்பாதித்த ஸர்வ ஸுகங்களையும் ஒரு தினத்திலேயே விட்டு யமனுக்குப் பராதீநமாகப் போகும்படியன்றோ இருக்கிறான்?]

'[illegible] ।
[illegible] ॥
[illegible] ।
[illegible] ॥'

[ஒரு மனிதன் கர்ப்பத்திலேயே இறந்து போகிறான். மற்றொருவன் பிறக்கிற காலத்தில் இறந்து போகிறான். பிறந்து பால்யாவஸ்தையில் அநேக மனிதர்கள் இறந்துபோகிறார்கள். மற்றும் சிலர் யௌவநாவஸ்தையில் இறந்து போகிறார்கள். வேறே சிலர் ஐம்பது வயது காலத்தில் இறந்து போகிறார்கள். கிழவனாக இருப்பவனை இறந்து போய்விட்டதாகவே நினைக்கலாம். இப்படி மின்னல்போல் நிலையில்லாதிருக்கிற மநுஷ்ய ஜந்மங்களைப் பார்க்கும் புத்திமான்களுக்கு இப்படியிருக்கிற ஜந்மத்தை நினைத்தால் ப்ரஹ்மதேவனாக இருந்தாலும் நெஞ்சு நடுங்காதிருக்குமோ?] என்று மஹாபாரதாதிகளில் மஹர்ஷிகள் அருளிச் செய்திருக்கிறபடியே ஸர்வ மனிதர்களும் பிறப்புப் பிணி பசி மூப்பு இறப்பு முதலிய எண்ணாராத் துயரங்கள் சூழ்ந்த ஸம்ஸார ஸமுத்ர மத்யத்தில் மூழ்கிக் கிடந்து, கொண்டாட்டும் குலம் புனைவும் தமருற்றார் விழுநிதியும் வண்டார் பூங்குழலாளும் மனையொழிய உயிர் மாய்ந்து போவதையும் அறிவதே மனிதர்கள் விஷயத்தில் நன்கு அறிவதாகும்.

இப்படி ஸ்தாவர ஜங்கம மநுஷ்ய ரூபங்களாய் அநந்தப்ரகாரங்களாயிருக்கிற ஸர்வ ப்ராணிகளும், ‘தாப த்ரயேணாபிஹதம் யதேதத் அஶேஷம் ஜகத்’ என்றும் ‘ஸர்வம் து:கமயம் ஜகத்’ என்றும் சொல்லுகிறபடியே துக்கப்ரசுரமாய் வருந்தியிருப்பதற்கு என்ன காரணமென்று ஆராய்ந்தவிடத்தில், ப்ரத்யக்ஷாநுமாந ப்ரமாணத்தினால் அந்தக் காரணத்தை அறிய முடியாமையினாலே அப்படி ப்ரத்யக்ஷம் அநுமாநம் இவைகளினால் அறிய முடியாத விஷயங்களைக் காட்டக் கூடியதான ஶப்த ப்ரமாணத்தை ஆராய்ந்தவிடத்தில், அபௌருஷேய மாகையினாலே நித்ய நிர்தோஷ ஶப்த ப்ரமாணமான வேதம் ‘இது நித்யர்களாய் அநந்தங்களான ஜீவாத்ம தத்வங்கள் பூர்வ ஜன்மங்களில்பண்ணின கர்மங்களுக்கு அநுகுணமாக ஸர்வஜ்ஞனாய் ஸர்வ ஶக்தனாயிருக்கிற ஸர்வேச்ரன் பலன் கொடுத்த ப்ரகாரம்’ என்று சொல்லுகையாலே, நித்ய நிர்தோஷ ப்ரமாணமான வேதத்தினால் சொல்லப்படுகிற ஜீவாத்ம தத்வ விஷயத்திலும் அவ்வாத்மாக்களினால் செய்யப்பட்ட கர்ம விஷயத்திலும், அந்தக் கர்மங்களுக்கு அநுகுணமாகப் பலன்களைக் கொடுக்கிற ஸர்வேச்வரன் விஷயத்திலும் ஸம்பூர்ணமான ஆஸ்திக்யத்தினாலே ‘ஸ்வக்ருதி தாநு’ என்கிறபடியே ஸர்வ ப்ராணிகளும் தாங்கள் முன் ஜந்மத்தில் பண்ணின கர்மங்களின் பலன்களை அநுபவிக்கின்றனவென்று நிச்சயித்து; இப்படி இந்த ஸம்ஸார மண்டலத்தில் துக்காநுபவம் பண்ணுகிற ஜீவாத்மாக்களுக்குள் தானும் ஒருவனாகையாலே தன்னுடைய ஸ்வரூப ஸ்திதியையும் நன்கு ஆராய்ந்து பார்க்குமளவில் ‘வ்ருதைவ பவதோ யாதா பூயஸீ ஜந்ம ஸந்ததி:’ என்கிறபடியே ஆத்ம ரக்ஷணத்திற்கு அநுகுணமான தர்மாநுஷ்டானத்திற்கு யோக்ய மில்லாமையாலே முன்பு தான் அநுபவித்த வ்யர்த்தங்களான ஸ்தாவர திர்யக் ஜந்மங்களையும்

‘குலந்தானெத்தனையும் பிறந்தே யிறந்தெய்த் தொழிந்தேன்
நலந்தானொன்று மிலேன் நல்லதோ ரறம் செய்துமிலேன்’

(தொடரும்)

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

வஸ்த்ர தாரணம்

[ஸ்ரீ. உப. வில்லிவலம் நாராயணாசார்ய ஸ்வாமி, ந்யாயாத்யாபகர்,
ஸ்ரீ. அ. மடம் ஸம்ஸ்க்ருத கலாசாலை, மதுராந்தகம்]

வஸ்த்ரேண வபுஷா வாசா வித்யயா விநயேந ச ।
வகாரபஞ்சகைர்ஹீநம் நரம் [illegible] ॥

என்று வஸ்த்ரம், வபுஸ் (ஶரீரம்), வாக்கு, வித்யை, விநயம், ஆகிய இவ்வைந்தும் வகார பஞ்சகமெனப்படும். இவ்வைந்தினால் மனிதனுடைய மதிப்பு உயர்கிறது. வஸ்த்ரம் வபுஸ்ஸுக்கு அலங்காரம். வாக்கென்பது பேச்சுத்திறன். வித்யை விஷய ஜ்ஞாநம். ஒருவன் பேச்சோடில்லாமல் விஷயம் நன்கு கற்றவனாயிருப்பின் அதுவே அவனுக்கோர் அழகாகும். விநயம் என்னும் வணக்கம் இல்லையானால் முற்கூறிய நான்கு மிருந்தும் அவை சற்றும் மாட்சி பெறமாட்டா. அன்றியும் அவை 'தோஷா ஹ்யேதே ஸர்வ ஏதே யதி நாம ஸ்யு: விநயா விநா ஹதா:' என்ற கணக்கிற் சேரும். தயையில்லாதவனுக்கு அறிவின் நிறைவும், சக்தியின் செறிவும், பிறரை ஹிம்ஸிக்கவே ஹேதுவாகும். ஆகவே; அதன் உயர்வு தோற்ற கடைசியில் விநயத்தை நிர்தேஶித்தபடி. வ, வா, வி-என்கிற வரிசை க்ரமமும், இங்கு விவக்ஷிதமே. இவைகளுள் வஸ்த்ர தாரணம் என்பதைப்பற்றிச் சிறிது கூறுவோம்.

முன்னொரு காலத்தில் வஸ்த்ரத்தின் விஶேஷம் பற்றி ஒரு வாக்யார்த்தம் விளைந்ததாம். 'உயர்ந்த உடை உடுத்தாவிடில் என்ன ஊனம்? விஶதமான வித்யை உண்டாகில், அஃதொன்றே போதும். ஶங்கரன் திகம்பரனென்று உலகறியும். ஆயினும் அவனை ஸர்வஜ்ஞனென்று கொண்டாடுகிறோம்' என்று ஒருவர் தம் பக்ஷத்தை

'அக்ஷராணி பரீக்ஷ்யந்தாம் அம்பராடம்பரேண கிம்? ।
ஶம்பு: அம்பரஹீநோऽபி ஸர்வஜ்ஞ: கிம் ந ஜாயதே ॥'

என்ற ச்லோகத்தைச் சொல்லி வாதித்தார். மற்றவர், 'நீர் அறிந்தது இவ்வளவு தானோ?

'பீதாம்பரம் வீக்ஷ்ய ததௌ ஸ்வகந்யாம் சர்மாம்பரம் வீக்ஷ்ய விஷம் பயோதி: ॥'

என்பதைக் கேட்டதில்லையோ? ஸமுத்ரராஜன் அம்ருத ஸஹோதரியான பெரிய பிராட்டியாரைப் பெருமாளுக்குப் பாணிக்ரஹணம் செய்வித்து, விச்வ வித்வேஷ விஷயமான விஷத்தை ஶங்கரனுக்கு வழங்கினான். எதற்காக இதைச் செய்தான்? பெருமாள் பரபாசமாகத் திருவரையில் சாத்தின பீதாம்பரத்தினுடையவும் பின்னவனின் பரதேசியினுடையவும் ப்ரபாவத்தாலன்றோ? ஆகவே, வஸ்த்ரம்

விலக்ஷணமாய் விளங்கவேண்டியதே’ என்று வாதித்தாராம். ஆகையால், விலக்ஷணமாய் வஸ்த்ரதாரணம் பண்ணிக் கொள்ளவேண்டியது அவச்யமென்று இதனால் ஏற்படுகிறதல்லவா?

ஒவ்வொரு தேசத்திலும் மனிதர் வஸ்த்ரம் உடுத்திக்கொள்ளும் விதம் ஒவ்வொரு விதமாயிருக்கிறது. ஆங்காங்குள்ள சீதோஷ்ணஸ்திதியை அடிப்படையாகக்கொண்டும், மனத்திற்குப் பிடித்திருப்பதைப் பொருத்தும் இம்மாறுதல்கள் நேர்ந்திருக்கலாம். ஆகிலும் தர்மசாஸ்த்ரம் சொல்லும் வழியென்று ஒன்று இருக்குமல்லவா? நம் போன்றவர்க்கு அதுவே நல்வழியாகும். வஸ்த்ரத்தின் பரிபாலந முறையும், அவைகளின் வெண்மைக் குணமும், ஆடை யணியும் விதமும் நம் பெரியோர்களிடம் வெகு சிறப்பாய் வாய்ந்திருந்தன. இன்னும் சில தென்னாட்டு ஸ்ரீவைஷ்ணவப் பெரியோர்களிடம் இவைகளைக் காணலாம். ‘ஸிதாஸீய வஸ்த்ரீய யஜுஷ ஸூத்ரசோபிதஃ’ என்றபடி, பூங்காவி படிந்து மங்களமாய்த்திகழும் அரை.மேல் வேஷ்டிகளையும், அரைவேஷ்டியை அச்சில் வார்த்ததுபோல் ஐந்து கச்சமாய் அமைத்து உடுத்தியிருக்கும் அழகையும் பார்க்கும்போது ‘வஸ்த்ரேண வபுஷா’ என்று முற்கூறிய ச்லோகார்த்தம் எவ்வளவு உண்மை யென்று உணரலாம்.

ஸ்நாநம் செய்த பிறகு வஸ்த்ர தாரணம் பண்ணிக்கொள்ள வேண்டிய விதம் தர்ம சாஸ்த்ரங்களில் வெகு விஸ்தாரமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது. அவைகளில் அவச்யம் அநுஷ்டிக்க வேண்டியவைகளாயும் அநுஷ்டிக்கக் கூடியவைகளாயுமுள்ள சில தர்மங்கள் இங்கே ஸங்க்ரஹிக்கப் படுகின்றன. ஸ்நாநம் செய்தானதும், துணிகளை ஒவ்வொன்றாய்ப் பிழிந்து தலையில் அடுக்கிவைத்துக் கொள்வதுதான் ப்ராசீநாசாரம்; சிலர் அவற்றைத் தோளில் வைத்துக் கொள்ளுகிறார்கள். அது பிசகு.

‘ஸ்கந்தே கவாடே பாஷாணே ஆர்த்ரவஸ்த்ரம் ந நிக்ஷிபேத்’

[தோட்களிலும், கதவிலும், துணி துவைக்கும் கல்லின்மேலும் ஈரத்துணிகளை வைக்கக்கூடாது] என்று யாஜ்ஞ்யவல்க்யர் நிஷேதித்திருக்கின்றார். சிலர் ஈரத் துணியை இடுப்பிலிருந்து கதவின்மேல் வைப்பது வழக்கம். அது இங்குத் தடுக்கப்படுகிறது. உலர்ந்த துணி உடுக்க ஆரம்பிக்கும் போது இடுப்பிலுள்ள ஈரவஸ்த்ரத்தை அப்படியே கீழே நழுவ விடக்கூடாது. அப்படியே மேலுக்குத் தூக்கி உலர்ந்த துணிக்கு வெளியில் கொணர்ந்து கீழே வைக்கவேண்டும். நேராகக் கீழே போட்டால் மறுபடி ஸ்நாநம் செய்யவேண்டும். இதனை

‘ஸ்நாநம் க்ருத்வார்த்ர வஸ்த்ரம் து ஊர்த்வமுத்ஸாரயேத் புதஃ ।
ஸ்நாந வஸ்த்ரம் யதோ ஹஸ்தாத் தத் ஸ்நாநம் புநராசரேத் ॥’

என்னும் ச்லோகத்தால் வ்யாஸர் தெரிவித்திருக்கிறார்.

கச்சம் உடுத்தும் விஷயத்தில்

‘பூர்வகக்ஷம் பூர்வமாயாம்ய பச்சாத் கக்ஷம் து ப்ருஷ்டத:|’

என்றபடி முன்கச்சத்தை முன்னுடி முடித்துக்கொண்டு பின்கச்சத்தைப் பிறகு செய்து முடிக்கவேண்டும். வெகுவாக லோகத்தில் வேஷ்டியை இடுப்பைச் சுற்றித் திரித்து விட்ட பிறகு ஏழெட்டு முழமுள்ள முன் பகுதியைப் பூமியிலேயே கிடக்க விடுவார்கள். அது ஒரு புறத்தில், துச்சாஸநன் த்ரௌபதியைத் துகிலுரிந்த போது துணி கிடந்தவாறு காணப்படும். பின் கச்சத்தை ஒழுங்கு படுத்தி வைத்துக் கொள்ளும் பொழுது காலை ஓரே அடியாய் உலகளந்தப் பெருமாளைப் போல் தூக்குகிற வழக்கம் பெரும்பாலும் காணப்படுகிறது. ‘நநமேயம் ஹி கஸ்யசித்’ என்ற ராவணன் நிலையில் இவர்களுக்கு இடுப்பு வணங்காது போலும். பிறகு, இடது கால் துணியைச் சொருகும் பொழுது துணியின் நுனியைக் கால் கட்டை விரலால் இழுத்து விட்டுக் கொள்வோரும் உண்டு. இது ஸ்த்ரீகள் புடவை உடுத்திக் கொள்ளும் பொழுது, அவர்களிடமிருந்து அப்யஸித்த ஆசாரம். இவைகளை நாம் சொல்லாமலேயே துராசாரமென்று தெரிந்து கொள்ளலாம். கூடிய வரையில் இவைகளைத் தவிர்க்க வேண்டும். முதலில் இவைகளை அநுஷ்டிப்பது கொஞ்சம் ச்ரமமாகத் தோன்றலாம். அப்யாஸத்தால் காலக்ரமத்தில் இவை ஸுலபங்களாகும்.

இவைகள் தாம் அப்படி என்பதில்லை. பொதுவில் எல்லாத் தர்மங்களுமே இயற்கைக்கு விருத்தங்கள் போல் ஒருவர் சொல்லி அதன் பிறகு நாமும் வெகு ச்ரத்தை கொண்டு செய்ய வேண்டியனவாயும் இருக்கின்றன. துராசாரங்கள் இயற்கையை அநுஸரித்தன போன்றனவாய் ஒருவர் சொல்லாமலேயே நாம் அநவதாநத்துடன் இருப்பினும் செய்யக்கூடியவையா யிருக்கின்றன. ஒருவனை அவன் போகும் வழியில் நாம் அநுமதித்துப் பார்த்தால் அவன் செய்வது நிச்சிதமாய் அதர்மமாகவே யிருக்கும். ஜநங்களுக்கு ஸ்வரஸமான ப்ரவ்ருத்தி அதர்மத்தில்தான். அதனாலன்றோ ‘ப்ராயோ நேதி ச்ருதிவிஷயதா விச்வஸ்ய ஹேது:’ என்றனர் பெரியோர். குழந்தைகள் ‘வேண்டாம், செய்யாதே’ என்றவற்றை விரும்பிச் செய்கின்றன. குழந்தைகளின் இந்த ஸ்வபாவத்தைத் தான், இக்காலத்தில் வயது வந்தவர்களும் கடைப்பிடிக்கின்றனர். ச்ருதிஸ்ம்ருதிகள் வேண்டாமென்று விலக்கியவற்றை விருப்புடன் செய்யவிழைகின்றனர். ‘ஏகாதசியன்று போஜநம் பண்ணுதே, த்வாதசியில் காலையில் போஜநம் செய்’ என்றது சாஸ்த்ரம். ஆனால் இவன் செய்வதென்ன? நேர் விரோதம்தான். ஏகாதசியில் உபவாஸம் இருப்பது பலருக்கு முடியாமலிருக்கலாம். அந்த விஷயத்தில் சாஸ்த்ரத்தை மீறட்டும்; சக்தியில்லை யென்று சாக்குப் போக்குக் காட்டட்டும். ஆனால் அடுத்த நாள் த்வாதசியன்று சாஸ்த்ரப்படி காலையில் போஜநம் செய்யத்தடையென்ன? அன்று விழுப்புடன் ஊர் சுற்றி யலைந்து பகல் 12.மணிக்குத்

தான் ப்ரோஜநம். இது எதைக்குறிக்கிறது? தனக்கு அநுகூலங்களாயும், செய்யக்கூடியனவாயுமுள்ளவைகளையும், ஶாஸ்த்ரம் 'செய்' என்று சொன்னால், அதுவே காரணமாய் அதைச் செய்யாமலிருப்பதுதான் மனிதன் ப்ரக்ருதி யென்பதைக் குறிக்கிறதல்லவா? தர்மத்தைச் செய்ய ஆவல் கிடையாது. அதன் பலமான ஸுகமோ நிரம்பவேண்டும். அதர்மத்தைச் செய்ய வெகு ஆசை. அதன் பலமான துக்கம் துளியும் தனக்குக் கூடாது. இதென்ன அவிவேகம்?

நிற்க, ப்ரக்ருதம் முற்கூறிய விஷயத்துக்குச் செல்வோம். மேல் துணியை அரையிலும் அரைத் துணியை மேலுக்கும் தரிக்கக்கூடாது 'நோத்தரீயமத: குர்யாந்நோபர்யத:ஸ்த²மம்ப³ரம்' என்று ஸ்ம்ருதிசந்த்ரிகை கூறுகிறது. இப்படி மாறித் தரிப்பதால் வேஷ்டி கெட்டுவிடுகிற விஷயம் கண்கூடாகவும் தெரியக்கூடியதே.

'ஏககச்ச²: பரகச்சோ² வா அகச்ச²: கடிவேஷ்டித: ।
யாவத்கர்ம த்³விஜஸ்தாவச்சண்டா³லவந்ந ஸம்ஶய: ॥'

என்றார் போதாயநர். கச்சமில்லாமலிருக்கக் கூடாது. (அதாவது தட்டாடை உடுத்திக்கொள்ளக் கூடாது.) மூலைக்கச்சமும் கூடாது. துணி நீளம் போதாமல் ஒரு மூலையைக் கச்சமாக எடுத்துச் சொருகிக் கொள்வது இதனால் தடுக்கப்படுகிறது. முன்னொன்றும் பின்னொன்றுமாய் இரண்டே கச்சம் கட்டிக் கொள்வதும் பிசகு. நம் ஸம்ப்ரதாயத்தில் பஞ்ச கச்சம் [ஐந்து கச்சம்] வைத்துக் கொள்வது வழக்கமாய் வந்திருக்கிறது. முன் ஒரு கச்சம்; பின் ஒரு கச்சம்; முன் பக்கத்திலேயே கச்சம் வைத்துக் கீழே தொங்கும் தலைப்பை மேலே அரும்புபோல் அடுக்கி வைத்துச் சொருகுவது மற்றொரு கச்சம்; அரும்பின் இருபுறங்களிலும் இரண்டு தடவை எடுத்துச் சொருகுவது இரண்டாகிறது; ஆக ஐந்து கச்சங்கள். மேலே எடுத்த ப்ரமாண வசநம் இரண்டு கச்சந்தான் கூடாதென்கிறது. 'கடிவேஷ்டித:' என்பது இடுப்பைச் சுற்றிக் கட்டிக்கொள்ளும் ஒரு ப்ரகாரத்தைத் தடுக்கிறது.

இப்படி ஶாஸ்த்ரம் விதித்தவற்றில் ச்ரத்தை கொண்டு ஸகலரும் ஒழுகி வரவேண்டுமென்று வேண்டிக்கொள்ளப் படுகிறது.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹவரவரமுநயே நம: ॥

புயலும் பொறுமையும்

[சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி]

[ஸ்ரீ. உப. கல்யாணபுரம், S. T. ஸ்ரீநிவாஸாசாரியார். M. A. வித்வான். L. T. திருவையாறு.]

யதுநாதனது பொழுது பெரும்பாலும் கோயிலிலேயே கழிந்தது. ஒரு ஸமயம் இவர் மாலை தொடுத்துக் கொண்டிருந்த பொழுது அவ்வழியே எழுந்தருளின மாதவாசார்யர் 'என்னனும்! பாட்டியம்மாக்கள் கைங்கர்யத்தைப் பிடித்துக்கொண்டுவிட்டா போலிருக்கிறதே' என்றார். யதுநாதன் அஞ்சலி செய்து மௌனமானார். மற்றொரு ஸமயம் ஏரிக்கரையிலும் அந்த ஸ்வாமி யதுநாதனிடம் 'என்ன ஸ்வாமி! ஆற்றலுக்குத் தக்கபடி அன்றோ பணி! ஸ்ரீபாஷ்யப்ரவர்த்தனம் அல்லவா முதன்மையாக விதிக்கப்பட்டது. வாசித்ததெல்லாம் மறந்துவிட்டீரா? தேவை இருந்தால் ச்ரத்தையுடன் கேட்டால்......' என்பதற்குள் யதுநாதன் 'ஸ்வாமிந்! அடியேன்போல்வார் புகும்படி ஸ்ரீபாஷ்யம் என்ன கிள்ளுக்கீரையா? மேலும் மாலை தீபம் முதலிய பணிகளும் விதிக்கப்பட்டவை தானே? அவற்றில் இனிமையிலுங் குறைவில்லையே. பஞ்சகாலபராயணராய், கல்பஸூத்ரத்திற்கு உரையிடத்தக்க சிறந்த அறிவாளியான ஸ்ரீ விஷ்ணுசித்தரும் மாலா கைங்கர்யத்தையே ஏற்றருளினரல்லவா?......' என்றார். மாதவாசார்யர் முகத்தில் அருவறுப்புக் கூத்தாடியது. வேணுகோபாலன் திவ்யாலயத்தில் அவர் பலவருஷங்களாகப் ப்ரவேசித்ததில்லை.

மாதவாசாரியார் சென்னைக்கு அடிக்கடி சென்று உபன்யாஸங்கள் செய்து வருவது வழக்கம். வாஸுதேவாசார்யர் இதற்குப் பெருந் துணையாயிருந்தார். வருமானமும் பெருகிக்கொண்டிருந்தது. ஸ்ரீமத்ராமாயணத்தை 'லௌகிகர்களுக்கு' ஒத்தமுறையில் வாரம் மூன்று நாள்கள் விகிதம் சில மாதங்களில் உபன்யாஸ ரீதியாகப் பட்டாபிஷேகம் செய்து முடிப்பதாக ஏற்பாடாயிற்று. ஸ்வாமியின் திருவுள்ளம் குதூகலித்ததெனச் சொல்லவா வேண்டும்? பட்டாபிஷேக தினத்தில் ரூபாய் இரண்டாயிரம் கிடைப்பதென்றால் எளிதா? ஸ்வாமியைப் பரமமண்டலம் வரையில் உயர்த்திப்பேசினார்கள். நடமாடும் தெய்வம் என்றார்கள். வாழ்க்கையில் எம்பெருமான் சேதனனுக்கு அளிக்கும் சோதனைகளில் நற்பதம் ஒன்று. இதில் தலைதிரும்பினால் கர்வம்; கர்வத்தால் மதம்; மதத்தால் பரபரிபவம்; பரிபவத்தால் அபசாரம்; அபசாரத்தால் ஆத்மநாசம்; மனிதனுக்குப் பெரும் படுகுழி இது. 'அச்சில்லாமல் தேரோட்டிய மாதவாசார்யர் தப்ப முடியுமா? 'நாதமுநிகள் உள்ளிட்டார்க்குப் போல் ஸாக்ஷாத்காராதிகள் ஸம்பவித்தாலும்

பீசனேன் நிறைவொன்றுமிலேன், சீலமில்லாச் சிறியன், சிறிய ஞானத்தடியன் என்றிருக்கப் ப்ராப்தம்' என்று ரஹஸ்யக்ரந்தத்தில் ஸ்வாமி தேசிகன் ஸ்ரீவைஷ்ணவனது ஸ்வரூபத்தைச் சோதித்துத் தருகிறார். 'முன்னடி பார்த்து நடக்கவும்' என்று எச்சரிக்கிறார்.

கர்வத்தினால் அந்தரான மாதவாசார்யரா தப்பிப் பிழைப்பார்? பெரும் பாக்கத்தில் பந்தகத்தில் பராதீனமாயிருந்த காணி ஒன்றை வாஸுதேவாசார்யர் மீட்டுக்கொண்டார். தமோதரரும் தாம் குடியிருந்த வீட்டைக் கிரயத்துக்கு வாங்கி ஸ்வாதீனப்படுத்திக்கொண்டார். 'கதக காளமேகம்' என்று சென்னையில் நம் ஸ்வாமிக்கு விருது கொடுத்தார்களாம். பெண்டுகள் மாத்திரம் ஏதோ கலகல வென்று பேசிக்கொண்டார்கள். அவர்களை ஏமாற்றுவது மிக அரிது.

சிஷ்யர்களுக்கு பகவத்விஷயம் ஸேவிக்க ருசி உண்டாயிற்று. ஸ்வாமிக்குக் கொஞ்சம் சீற்றம் உண்டாயிற்று. 'இதென்ன வைஷ்ணவ ஸங்கேதம் தானே? தமிழ்ப் பாடல்களைப் படித்துப் பொழுது போக்குவதில் எனக்கு மனது செல்லவில்லை' என்றார். தாமோதரன் புன்சிரிப்புடன் 'அப்படி ஸாதிக்கக்கூடாது. உபயவேதாந்திகளாகிய நமக்கு விடமுடியாத இந்தக் க்ரந்தத்தை சிஷ்யர்கள் எங்கு ஓதுவது? மேலும் மஹநீயராகிய தேவரீருடைய பிதாவும் ஒருதரம் ப்ரவசநம் செய்ததாகக் கேள்வி உண்டு. ஆகையால் தேவரீரிடமே ஜ்ஞான ஸம்பாதனம் செய்பவர்களை வெளியே காட்டிக் கொடுக்க வேண்டாம். நடக்கட்டும்' என்று வேண்டினார். ஸ்வாமியோ முகத்தைச் சுளுக்கிக் கொண்டு 'தமிழ் பாஷையின் லக்ஷணங்களை—மர்யாதைகளை—நன்றாய் விளக்க முடியாமல் அந்த க்ரந்தத்தை ...... என்? அது நடக்காவிட்டால் என்ன?' என்றார். தாமோதரன் 'ஊஹூம்! அது நடக்கவே வேண்டும். இதில் என்ன கவலை? அண்ணாவின் திவ்யமங்கள விக்ரஹத்தை அநவரதம் த்யானிக்கும் தேவரீருக்கு எட்டாத அர்த்தங்களும் உண்டோ?' என்றார். காலக்ஷேபம் ஆரம்பமாயிற்று. ஸ்ரீதரன் நல்ல தமிழ் அறிஞர். ப்ரவசநத்தில் சிறிதும் ருசி இல்லாமல் இருந்தது. சப்தம் போனபோக்கில் அர்த்தம் சொன்னால் கூட இனிமையாயிருக்கும். ஸமஸ்த பதங்களை வாயினாலும் உச்சரிப்பதில்லை. ஸ்வாமிக்கு வெறுப்பு உண்டாயிற்று. 'இதென்ன க்ரந்தம்! க்ருஷ்ணா ராமா என்று தசகம் தசகமாய் கூச்சலாகவே இருக்கிறது. ஸூக்ஷ்மமான கோடிகளைச் சொல்லிப் பலமான பூர்வபக்ஷங்களைக் கண்டிக்கும் க்ரந்தமா? கையிலே புஸ்தகத்தை எடுத்தால் இதோ பௌத்தன் தொலைந்தான்; அதோ ஜைனன் ஒழிந்தான்; இதோ பாசுபதன் ஓடுகிறான்; இங்கு காணாதன் கலங்குகிறான்; இங்கு சார்வாகன் இறந்தான்; அதோ தார்க்கிகர்கள் தள்ளாடுகிறார்கள்; என்றபடியல்லவோ க்ரந்தம் அமைய வேண்டும்' என்றார். தாமோதரர் சிரித்துக்கொண்டு 'அப்புறம் காலக்ஷேபகூடமா அது? கொலைக்களமா?'

என்றார். பிறகு தனக்குள் 'ஸ்ரீபாஷ்யத்தை வைத்துக் கொண்டு விரவிஜ்ரும்பணம் தான் செய்துவிடுவீர்! ஐயோபாவம்! 'ஸீவா நேதா தஸ்ஸேவ்ய' என்று திவ்யப்ரபந்தம் உமக்கு என்னமாயிருக்கும்' என்று சொல்லிக்கொண்டார். ஸ்ரீதரன் மனம் புண்பட்டது. தான் வீண்பொழுது போக்குவதாக நினைத்தார். ஆயினும் ஆசார்யனை எப்படி எதிர்ப்பது? யதுநாதனைப் பார்க்கும் பொழுதெல்லாம் 'ரூபத்தாலும் செயலாலும் சால இனியரான இம்மஹான் உலகத்திற்கே ஒரு உதாரணமாவார்போலிருக்கிறது. உண்ணும் சோறும் பருகு நீரும் தின்னும் வெற்றிலையும் கண்ணனெம்பெருமான் என்பதைத் தம் வாழ்விலேயே காட்டுகிறாரே! வாசித்தும் வணங்கியும் கேட்டும் வழிபட்டும் பூசித்தும் போக்குகிறார் பொழுதை' என்று நினைப்பார். அவரைக் காணும்பொழுது கைகுவிப்பார். யதுநாதனும் முகமலர்ச்சியுடன் க்ஷேமம் விசாரித்துச்செல்வார். ஒருதரம் யதுநாதனை 'ஈச்வர தத்வத்தைப் பற்றிச் சுருக்கமாய் எப்படி அறிவது?' என்றார். யதுநாதன் சிரித்துக்கொண்டு 'தேனும் பாலும் கன்னலும் அமுதும் போல் நித்ய போக்யனான அவனுக்கு, ஜலத்திற்கு சைத்யம்போல், நெருப்பிற்கு உஷ்ணம்போல், எல்லையற்ற க்ருபையே நிரூபக தர்மம் என்பார் ஆழ்வார்' என்றார். ஸ்ரீதரனது கண்களில் கண்ணீர் பொசிந்தது.

கோவிந்தற்குக் குற்றேவல் செய்வதே யதுநாதனின் ஆனந்தம். அதையும் ஆண்டாள்போல் இங்குப் பெறாது அங்கு போய் பெறுந்தவந்தானென்? என்ற கொள்கை உடையவர். பசியினால் வாடிப் பிணியினால் நொந்து கிடந்த பல்லாயிரம் மக்களது கூட்டத்தில் பங்கஜாக்ஷன் நடமாடுவதைக் கண்டார். இவ்வுலகின் பசியை ஒழிப்பதே பத்மாபதியின் திவ்யாராதனம். நிற்க நிழலற்றவர்க்கு இடமளிப்பதே நீரஜாக்ஷனது திவ்யப்ரதிஷ்டை. ஏழைகள் அழுத கண்ணீரைத் துடைப்பதே இந்திராபதிக்கு ஷோடசோபசாரம். துக்கத்தினால் வாடிய முகத்தில் களிப்புக்குறி உண்டுபண்ணுவதே ஸ்ரீதாமோதரனுக்குத் திவ்யாலங்காரம். ஆடையற்ற மக்களுக்கு ஆடை அளித்தலே அச்சுதனுக்கு ஆனர்தம். பசியினால் வாடிக் கண் குழிந்து உயிர் இழந்த ப்ராயமான மக்களுக்கு வயிறார உணவளித்தால் அதுவே பரந்தாமனுக்கு மஹாநிவேதனம் என்ற எண்ணம் கொண்டவர். சிறு குழந்தைகளைத் தெய்வத்தின் அம்சமாகக் கருதுபவர். உடலுக்கு உணவும் ஆடையும் அறிவுக்குக் கல்வியும் புத்தகங்களும் இன்றியமையாதன என்பார்.

பெரும்பாக்கத்தில் ஒரு பாடசாலை ஏற்படுத்தினர். முதலில் பத்துக் குழந்தைகளுக்குப் பாடம் சொல்ல ஸ்ரீதாமோதரனை வேண்டினர். மாதவாசார்யரின் தூண்டுதலால் அவர் இசையவில்லை. சென்னையிலிருந்து ஒரு வித்வானை வரவழைத்தார். குழந்தைகளுக்கு அன்னம் தாமே செய்து அளிப்பார். குழந்தைகள் உண்ட பிறகு தாம் உண்பார். ஊரில் யாருக்குப் பணத்தட்டு ஏற்பட்டாலும் யதுநாதன் உதவுவது நிச்சயம். இவரிடம் பொய்சொல்லி எவ்வளவோ பெயர்கள்

உதவி பெறுவதுண்டு. இவரை ‘அசடு’ என்று கருதியவரும் உண்டு; இவரை நேரில் திட்டியவர் கூடக் கலங்கி ஒரு பொருளைக் கேட்டால் உடனே கொடுப்பார் அவர் தம்மை வைததை அடியோடு மறப்பார். ‘காமக்ரோதங்களின் அதிகாரம் நிறைந்த இந்த உலகில் பிறரது தவறுதல்களை மன்னிக்கத் தெரிந்துகொள்ளாவிட்டால் நம் பாபங்களை மறக்கவேண்டுமென்று நாராயணனை எப்படி வேண்ட முடியும்? ஸர்வேச்வரனிடமிருந்தும் நாம் எதிர்பார்க்கும் க்ருபையின் லேசத்தை நாம் மற்றொருவர்க்குச் செய்ய வித்தமாய் இல்லாவிட்டால் க்ருபாநிதியான ஈச்வரன் நம்மிடம் எப்படி இரங்குவான்? ஈச்வரனுடைய முகோல்லாஸம் ஒருபுறம் நிற்க, இந்த தயை என்பது ஸ்வயமே போக்யமான பொருளாயிருக்கிறது. தயையானது ஒரு மனிதனை மிருக வர்கத்திலிருந்து வேறு படுத்துகிறது. இந்த துக்கமயமான உலகத்தை வைகுந்தமாக்குகிறது. வாழ்க்கையை விரும்பத்தக்கதாக்குகிறது. மனிதனுக்குச் சிறந்த புறஅழகு அகஅழகு இரண்டையும் உண்டுபண்ணுகிறது. பலம், பொறுமை, இன்பம் இவைகளைத் தருகிறது. மண்ணை விண்ணாக்கும் இம்மாயப் பொருள் மனிதனிடம் இல்லாவிட்டால் அவனுக்குத் தன்மை எது? தழைப்பு எது? உயர்வு எது? ஒன்றுமில்லை. மேலும் கட்புலனாகாத கருணாகரன் எங்கே இருக்கிறான்? திவ்யாலயங்களிலும் பெரியோர்கள் உள்ளத்திலும் தாண்டவமாடுகிறான். அவனுடைய நடமாடும் ஸ்வரூபமே தீனன். துக்கிதன், ஏழைகள் மூலமாக உலகில் தெய்வத்தன்மை இருக்கின்றதா என்று ஆராய்கிறான். பசியினாலும் துயராலும் வாடி உஷ்ணமாக உதிர்க்கும் கண்ணீர்த் துளிகளில் அவன் காணப்படுகிறான். வாழ்க்கையில் நொந்து, புறக்கணிக்கப் பட்டுத் தாழ்ந்து, அடிப்படையான இன்பங்களும் இன்றி, ஆற்றுவாரற்றுக் கதறும் மனிதனுடைய துயரங்கலந்த விளியிலே அவன் இருக்கிறான். பணக்காரனுடைய கடமை யாது? மக்கள் தொண்டு மாதவன் தொண்டெனக்கொண்டு ஐயமும் பிச்சையும் ஆந்தனையும் கைகாட்டி உய்யுமாறு எண்ணுதலே. ப்ரபஞ்சமே ஒரு அழகிய குடும்பம். ஸர்வேச்வரனே நிருபாதிகனான பிதா. இவனை நம்பி, இவனது திவ்யக்ருபையையும் நம்பினால் மனிதன் இருக்கும் இடமே வைகுந்தமாகும். உலகின் துயர் ஓயும்; பசி பறக்கும்; பிணி ஒழியும்; கர்மானுபவமென்று துணிவு ஏற்பட்டால் பாரதத்தில் ஏன் தானத்தைப்பற்றிப் பரக்கப்பேசவேண்டும்? தவத்தைப் பல நூல்களில் ஏன் சிறப்பிக்கவேண்டும்? கீதையில் ஸ்வப்ரயத்நத்தை ஏன் வற்புறுத்தவேண்டும்? வையத்து வாழ்வார்களுக்காகவே வந்தவர்களல்லவா ஆழ்வார்கள். இவர்கள் சொல்லே ச்ருதி. வாழ்க்கையே ஆதர்சம். களங்கமற்ற தத்வ உணர்ச்சி பண்டிதபாமரருட்பட இவரது அரிய நூல்களாலேயே ஏற்படுவது. இவர்களைப்போல் மனிதவர்க்கத்துக்கு ஆப்தர்களை எங்கே காண்பது? பெற்றதாயினும் ஆயினசெய்பவர் இவர்களே! ‘தீங்கின்றி நாடெல்லாம் திங்கள் மும்மாரி பெய்வதே இவர்கள் வழியைப் பின்பற்றுபவர்கள் காண்பது. இவர்களுடைய காதலுக்குக் கடலும், மலையும், விசும்பும் வரம்பாகாது; உவமையாகாது. இவர்கள் வையந்தகளியா வார்கடலே நெய்யாகத் தங்கள் ஆர்வ ஒளி காட்டுபவர்கள். ‘உன்னை எங்ஙனம் நான் விடுகேனே’

'வேம்பின் புழு வேம்பன்றி உண்ணாது' என்றுங் கதறி ஸ்ரீயப்பதியின் திருவடியைச் சார்ந்து கிடப்பார். இத்தகைய அழகிய ஸித்தாந்தத்தின் உயிர் நிலையை மனத்திற்கொண்டு பெரிய காதல் பூண்ட மனத்தினராய் யதுநாதன் ஸ்ரீகாந்தனது தொண்டில் ஈடுபட்டு அத்தொண்டும் தொண்டின் பயனுமே உருவெடுத்தவராய் விளங்கினார். புஜித்து இன்புற்ற மக்களைப்பார்க்க ஆநந்தம். ஆடை அணிந்த மக்களைப்பார்க்க ஆநந்தம். செல்லம் என்ற கிழவி ஒரு ஸமயம் அவரிடம் 'என்னவோ! எவ்வளவோ செலவு செய்கிறீர். உமக்கென்று ஒரு குழந்தையைப் பகவான் கொடுக்கவில்லை' என்றாள். யதுநாதன் சிரித்துக் கொண்டு 'செல்லம்மா! தினந்தோறும் பத்துக் குழந்தைகளை வைத்துக் காலந் தள்ளுகிற நான் பெரிய ஸம்ஸாரியல்லவா' என்று கேட்டார். ஒரு தீபாவளி ஸமயம் பத்துக் குடும்பங்களுக்கு உடையும் பணமும் கொடுக்க ஏற்பாடு செய்திருந்தார். இவருக்காக வேலை செய்தவர்கள் கண்டபடி விநியோகித்துவிட்டனர். தீபாவளிக்கு முதல்நாள் ஏரியிலிருந்து யதுநாதன் திரும்பும்பொழுது ஒரு வீட்டில் உரத்த சத்தம் கேட்டது. குழந்தைகள் சிலர் அழுதுகொண்டிருந்தனர். ஆண் குரலில் ஒருவன் 'இதுகளை அப்படியே ஏரியிலே பிடித்து அமுக்கிக் கொன்றால் ஸௌகமுண்டு. தீபாவளின்னா இதுகளுக்கென்ன?' என்றான். ஒரு பெண் 'என்னவோ குழந்தைகள் கேட்குமா? மணியக்காரராத்துப் பையன் பட்டாஸு சுடுகிறானும். என்னை வதைக்கிறது இந்தப் பிசாசுகள்' என்றாள். விக்கிவிக்கி ஒரு பையன் அழுதுகொண்டிருந்தான். 'இப்படி நெருப்பிலே காட்டினா டபான்னு வெடிக்கறதம்மா—ஒரு கட்டுக் கொடம்மா' என்றான். 'உங்களெல்லாம் நெருப்பிலே காட்டினால்தான்' என்றான் அந்த வீட்டுக்காரன். இரவு பத்துமணி இருக்கும். சிம்மணி விளக்கு மங்கலாய் எரிகிறது: ஊரில் பல குழந்தைகள் வெடிகள் வெடிக்கும் சத்தம் கேட்கிறது. யதுநாதன் ஒருகாகிதப் பொட்டலத்துடன் தோன்றினார். ஐந்து வயதுள்ள ஒரு பையனைக் கிட்ட அணைத்து அதன் கையில் ஐந்தாறு மத்தாப்பூப் பெட்டிகளை வைத்தார். பெரிய பையன்களுக்குச் சீனவெடிகளையும் கொடுத்தார். தேவு என்கிற அக்குழந்தை 'தாத்தா! நீ அதைத் திரும்பி வாங்கிக்கமாட்டாயே?' என்றது. யதுநாதன் தலையசைத்தார். அழுகை நிறைந்த வீட்டில் ஆனந்தமும் அமைதியும் மேலிட்டது. 'தேவு' மத்தாப்புப் பெட்டிகளை அணைத்தவண்ணம் தூங்கினான். விக்கல் அடங்கவில்லை. கண்ணில் கண்ணீர் உலரவில்லை. முகத்தில் எல்லையற்ற ஆனந்தக்குறி தாண்டவமாடியது. சிம்மணி விளக்கின் மங்கிய வெளிச்சத்தில் நித்யஸூரிபோன்ற தூய உள்ளத்தை உடைய அக்குழந்தையின் மனக்களிப்பிற்கு விலை இடுவார்கள் இவ்வுலகில் உண்டா? 'சீமாக்கு ஒரு—பெ-ட்டி நேக்கு ஒருபெ-ட்டி- தாத்தா சுந்தாக்கும் ஒன்னு குடுத்தா' என்று பிதற்றினான். நித்யஸூரிகளின் களங்கமற்ற ஹ்ருதயம் போன்ற அச்சிறு குழந்தையின் ஆனந்தத்தை யதுநாதன் பக்கலில் இருந்து பார்க்கவில்லையாயினும் அவருடைய உள்ளத்தில் இது இப்படி இருக்கும் என்ற பாவனை உண்டாயிருக்கக் கூடும். 'ஏழைகளாகப் பலர் பிறப்பானேன்' என்று கேட்டுக்கொள்வார். ஒரு சிறுகண்ணீர்த் துளியுடன் 'நான்யார் இதைக்கேட்க' என்று மெதுவாகச் சொல்லிக் கொள்வார்.

பெரும்பாக்கத்தில் ‘சீமா’ என்றொருவர் இருந்தார். அவர் அவ்வூர் கோவிலில் பரிசாரகராயிருந்தார். அவருக்கு மனைவி இறந்து மூன்று வருஷமாயிற்று. 5 வயதில் ஒரு பெண்ணும், 3 வயதில் ஒரு பையனும் உண்டு. மார்கழி மாதம் குளிர் சுரம் கண்டது. சீமா இறந்தார். அந்த ஊரில் அவருக்கு உறவென ஒருவருமே இல்லை. வேறு எந்த ஊரிலும் இல்லை. குழந்தைகள் நிர்கதியாயின. சீமாவைப் பற்றிப் பலர் பேசி அநுதாபித்தனர். குழந்தைகளுக்கு என்ன ஆயிற்று, ‘சீமா’வுக்குச் செய்யவேண்டிய சமக்கடன்களுக்கு வீட்டில் பணமில்லை. ஒரு சிறிய கைப்பெட்டியில் இரண்டு ரூபாயும் சில்லறையும், பத்து ரூபாய் பெறக்கூடிய சில பாத்திரங்களுமே இருந்தன. யதுநாதன் சீமாவை ஸம்ஸ்கரித்தார். ‘ஐயோ குழந்தைகள் தெருவில் நிற்க வேண்டுமே’ என்றார் ஒருவர். ‘பிச்சை எடுப்பதற்கும் அறியாத குழந்தைகளாயிற்றே’ என்றார் இன்னொருவர். வேலூரில் சீமாவுக்கு ஒரு தம்பி இருக்கிறான் என்று சொல்லுகிறார்களே’ என்றார் ஒருவர். மற்றொருவர் ‘ஆமாண்டா அவன் எங்கேயோ திருட்டில் ஸம்மந்தப்பட்டுப் போலீஸுக்குப் பயந்து ஓடிவிட்டதாகக் கேள்வி. மேலும் அவன் கூடப்பிறந்த ஸஹோதரனல்லன். இந்த இரண்டு குழந்தைகளையும் ஒப்புக்கொள்வதற்கு இங்கே ஓடி வருவானா?’ என்றார் மற்றொருவர். குழந்தைகளுக்கென்ன தெரியும்? சீமாவைக் காணாமல் பெண்குழந்தைமாத்திரம் ‘அப்பா அப்பா’ என்று அழுதது. பையன் சிரித்துக்கொண்டு மழலைச்சொற்கள் சொல்லி விளையாடிக்கொண்டிருந்தான். சீமாவை ஸம்ஸ்கரித்த உடனேயே யதுநாதன் ஒரு கையில் பெண்குழந்தையையும் தோளில் பிள்ளைக் குழந்தையையும் ஏற்றுத் தம் இல்லம் சென்றார். வழியிலே செல்லம்மா எதிர்ப்பட்டாள். ‘ஐயோபாவம்! நீர் இல்லாவிட்டால் இந்தக் குழந்தைகள் மண்ணோடு மடியவேண்டும்’ என்றாள். யதுநாதன் சிரித்துக்கொண்டு ‘நான்தான் இந்த பூலோகத்தைத் தாங்குவதாகப் புராணங்களிற் படித்திருக்கிறீரோ! ஸ்ரீவேணுகோபாலன் கருணையுள்ளமட்டில் உலகில் அநீதிகள் நடைபெறா’ என்றார்.

மாதவாசார்யர் இதைக்கேட்டுப் பொறாமையால் வாட்டப்பெற்றார். ‘இந்த சீமா ஒரு உபயோகமற்ற வ்ராத்யப்பயல்! அவன் மடிந்தவுடன் அவன் குழந்தைகளை ராஜாவீட்டுக் குழந்தைகளைப்போல இந்த அசடு வளர்க்கிறானே! இவன் சிறந்த டம்பாச்சாரி என்றே சொல்ல வேண்டும். பாடத்தில் ஒரு யோக்யதையுங் காணோம்; பள்ளிக்கூடமாம். வயிறாரத் தின்று தொப்பையைத் தடவிக்கொண்டிருக்கிறதுகள்’ என்றார். ஆமாம் ‘அவர் இல்லாவிட்டால் ஒரு காவ்ய நாடக ஞானமுள்ள வ்யக்தியையே இந்த ஊரில் பார்க்கமுடியாமல் போகும். முதலில் ஆகாரத்தைத்தான் எடுத்துக்கொள்ளலாமே. பசியைப் போக்குதல் பெரிய தர்ம மல்லவா? என்றார் தாமோதரன். ‘அவர் மிகவும் பெரியவர்தான்’ என்றான் வாஸுவும்.

(தொடரும்)

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

கைமுதிக ந்யாய தத்வம்

[மதுராந்தகம் ஸ்ரீ. உப. தி. ஏ. வீரராகவாசார்ய ஸ்வாமி,
ஸம்ஸ்க்ருத காலேஜ், திருவையாறு]

ஸ்ரீமத்ரஹஸ்யத்ரயஸாரத்தில் அதிகாரி விபாகாதிகாரத்திலே—

ஸித்த்யதி வா நேதி ஸம்சயோऽச்யுதஸேவிநாம் ।
ந ஸம்சயோऽஸ்தி தத்பக்த பரிசர்யாரதாத்மநாம் ॥’

என்கிற கணக்கிலே ஆசார்யநிஷ்டனுக்கு கைமுதிக ந்யாயத்தாலே பலஸித்தியில் ஸந்தேஹமில்லை’ என்பதாக ஸ்ரீதேசிகன் ஸ்ரீஸூக்தியுள்ளது. இதன் பேரில் ‘கைமுதிக ந்யாய விசாரம்’ என்கிற மகுடத்தின் கீழ் ஓர் சங்கையானது சென்ற ஸஞ்சிகையில் ப்ரசுரமாகியிருக்கிறது. அதாவது:—

(1) கைமுதிக ந்யாய தத்வத்திலே முதல் வாக்யார்த்தத்தைக் காட்டில் மற்றொரு வாக்யார்த்தத்தில் குறைவு (ந்யூநதை) வர்ணநம் செய்யப் பெறவேண்டும். ‘ஸித்த்யதிவா’ என்கிற ச்லோகத்திலோ பகவதாச்ரயணத்தைக் காட்டிலும் பாகவதாச்ரயணம் குறைந்ததென்று வர்ணிக்கவில்லை. ஆகவே கைமுதிக ந்யாய ஸஞ்சாரம் கொள்ள விரகில்லை.

(2) மேலும், அவ்வசநம் பாகவதமஹிமையை ப்ரதர்சநம் செய்வதாக சாண்டில்ய ஸ்ம்ருதியில் காண்கிறது. ஆசார்யநிஷ்டாப்ரதிபாதநம் அங்கு ஏற்படவில்லை. ஆகவே இதை ஆசார்யநிஷ்டைக்கு ப்ரமாணமாக்கியதும் ‘கைமுதிகந்யாயத்தாலே’ என்றதும் எப்படி ஸங்கதமாகும்? என்பதே அந்த சங்கை.

ஸமாதானம்

(1) கைமுதிகந்யாய விஷயமான அர்த்தம் பூர்வ வாக்யார்த்தத்தை அபேக்ஷித்து ந்யூநமாயிருக்கவேண்டும் என்பதில்லை.

‘மத்த: ப்ரத்யவர: கச்சிந் நாஸ்தி ஸுக்ரீவ ஸந்நிதௌ ।
அஹம் தாவதிஹ ப்ராப்த: கிம் புநஸ்தே மஹாபலா: ॥’

என்பதாக பிராட்டியிடம் திருவடி வாக்யம். மஹாராஜர் ஸைந்யத்தில் நானே நிக்ருஷ்டதமன்; அடியேனே கடல் கடந்து இலங்கையை அடைந்திருக்கிறேன். மற்றுள்ளார் என்னிலும் மஹாபலிஷ்டர். அவர்களுக்குக் கேட்கவேணுமோ? என்று கைமுதிகந்யாயம் காண்கிறது இங்கு கைமுதிக ந்யாய விஷயமான வர்த்தம் உத்க்ருஷ்டமானதென்பது தெளிவானது.

...ஷ்ரூஷ்வியோஜநஃ' என்பதாக முதலிகள் திருவோலக்கத்தில் ஸ்ரீ சக்ரவர்த்தித் திருமகன் வார்த்தை. 'கபோத மொன்று சரணுகத ஸம் ரக்ஷணம் செய்தபடியைக் கண்டால் நம்போலிகளுக்குக் கேட்க வேணுமோ? சரணுகத ரக்ஷணத்திற்குக் கொடி யெடுத்த ரகு வம்சத்திலே, ப்ரஸித்தனுன தசரதன் மகனுய் வஸிஷ்ட விச்வாமித்ர சிஷ்யனுய் மஹா யோகியாக ப்ரக்யாதனுன ஜநகனேடே ஸம்பந்தம் பண்ணின நாம் சிஷ்டதயா ப்ரஸித்தியை ஏறிட்டுக் கொண்டு இன்று சரணுகதனைக் கைவிடில் நாடென்படக் கடவது.' என்று கைமுதிக ந்யாயம் ஸுஸ்பஷ்டமானது. இதில் ந்யூநதைக்கு மாருக பலவிதத்திலும் மேன்மை யன்ருே காண்கிறது?

'ஸ்த்ரீணாமஶிக்ஷித படுத்வமமாநுஷீஷு ஸந்த்ருஶ்யதே கிமுத யாஃ ப்ரதிபோதவத்ய:' என்பதாக சாகுந்தலத்தில் துஷ்யந்தன் வாக்யம். பயிற்சி யின்றிப் பாடவத்தைக் குயில் போன்ற ஜந்துக்களிடம் காண்கிருேம்; விசேஷ நிருபண சக்தி வாய்ந்த ஸ்த்ரீகளிடம் கேட்கவேணுமோ? என்று சிறந்த விஷயத்தில் மேற்படி ந்யாயம் காண்கிறது. 'கிமுத யத்ர வதாஷ்யம்' இத்யாதியாகப் பற்பல உதாஹரணங்களுமுண்டு. ஆகவே பூர்வ வாக்யார்த்தத்திலும் மேன்மைபெற்றது கைமுதிக ந்யாயவிஷயமாகத் தட்டில்லை.

(2) ஶாண்டில்ய ஸ்ம்ருதியிலுள்ள 'ஸித்திர்பவதி வா' என்கிற வசநமானது பாகவத மஹிமையைப் பற்றியது என்பதில் ஐயமில்லை.

நான்முகன் திருவந்தாதியில் இவ்வசநத்தின் கருத்தை ஆழ்வார்

'மாருய தானவனை வள்ளுகிரால், மார்விரண்டு
கூருகக் கீறிய கோளரியை—வேருக
ஏத்தியிருப்பாரை வெல்லுமே மற்றவரைச்
சார்த்தி யிருப்பார் தவம்.'

என்று வெகு அழகாக அருளியிருப்பது நமக்கு நித்யாநுஸந்தாநத்திற்குரியது. வேருக வேத்தியிருப்பாராகிருர் அந்தியம்போதி லரியுருவாகி அரியை யழித்தவனைப் பல்லாண்டு பாடும் பெரியாழ்வார் போல்வார்; மற்றவரைச் சாத்தியிருப்பாராகிருர்' 'வல்ல பரிசு வருவிப்பரேல்' என்று பெரியாழ்வார் பக்கலிலே ந்யஸ்த பரராயிருக்கும் ஆண்டாள்போல்வர்; தவம்-ஸுக்ருதம்' என்பதாகப் பெரியவாச்சான் பிள்ளை யுரை. உதாஹ்ருதமான ஶாண்டில்ய வசநத்தினுல் ஆசார்யரல்லாத கேவல பாகவத நிஷ்டருக்கும் பலஸித்தியில் ஸந்தேஹமில்லை என்று ஏற்படுகிறது.

மந்த்ர மந்த்ரார்த்தோபதேசகராய் பாகவதருமானவர் ஆசார்யர்; அவர் கேவலபாகவதரிலும் மேன்மைபெற்றவர். ஆகவே ஆசார்யர்களை ஆச்ரயித்து ந்யஸ்த பரர்களுக்குக் கைமுதிகந்யாயத்தாலே பலஸித்தியில் ஸந்தேஹமில்லையென்று 'ஸர்வம்

ஸாமவத ஸெவாமிஷெஷஸ்ய ஹெஷஸிஜள க்ஷுவாய்நிஷெஷஸ்ய …
ஹெஷஸிஜள ந ஸநெஹஸ்! ஜஷம் ஸவயெயிசாஸிவிஹா மாயிகாமெ ஊஜஷவ்யு …
பதாகக் கைமுதிக ந்யாயத்தை திருக்குடந்தை தேசிகன் நிக்ஷேப சிந்தாமணியில் தெளிவுபடுத்தியிருப்பது, ப்ரக்ருத சங்கைக்குத் தகுந்த பரிஹாரமாகும்.

ஸ்ரீ அழகியசிங்கர் ந்யாஸநிஷ்டா மீமாம்ஸையில் [ப-20] 'பகவத்பக்த பரிசர்யாரதர்களுக்கே பலஸித்தியில் ஸம்சயமில்லை என்று அந்த ச்லோகத்தில் சொல்லியிருப்பதால் அந்த ச்லோகோக்த ப்ரகாரத்தாலே பகவத் பக்தர்களால் அநுஷ்டிதோபாயர்களுக்கு கைமுதிகந்யாயத்தாலே பலஸித்தியில் ஸம்சயமில்லை என்றபடி' என்பதாக ப்ரக்ருத ஸ்ரீதேசிக ஸூக்திக்கு தாத்பர்யம் அருளியாயிருக்கின்றது.

இப்படி இவ்வசநமானது ஆசார்யநிஷ்டையில் கைமுதிக ந்யாயத்தாலே ப்ரமாணமாகிறது என்பது தெளிவாகிறது.

இந்த சாண்டில்ய வசநத்திற்கு வ்யாக்யாந கர்த்தாக்கள் க்லிஷ்ட கல்பனை செய்து அர்த்தவர்ணநம் செய்தும் கைமுதிகந்யாய லக்ஷண ஸமந்வய ப்ரதர்சநம் செய்யவில்லை என்று கைமுதிகந்யாயவிசாரத்தின் இறுதியிலுள்ளது. சப்த தாத்பர்யாநுகுணமான லக்ஷணை முக்யார்த்தத்திலும் சிறந்ததன்றோ? பகவானை ஆச்ரயிப்பவர்களுக்குப் பலஸித்தியில் ஸந்தேஹமே என்று பூர்வார்த்தத்தின் தாத்பர்யமாகக் கொள்ளலாகுமோ? ஆகவே இந்த வாக்யம் அந்யபரம் என்பதாக ஸாக்ஷாத் ஸ்வாமியின் ஸாரஸ்வாதிநியில் அருளியதை உபேக்ஷிக்கலாகுமோ?

கைமுதிகந்யாயமானது ஓர் அர்த்தவர்ணநம் செய்யுமிடத்தில் மற்றொரு அர்த்தமானது தன்னேற்றமாய் ஸித்தித்து, அதைப்பற்றிய சொல் மிகுதியாய் நிற்குமிடத்தில் காண்கிறது. இதையே

'கெஞ்சந்தெ்ரநாய்ஸம்ஸிஜி: காவ்யாய்ாவெ த்ரிஸிஷ்ரெத।
ஸ ஜிதஸூந்வெநெநூ: கா வாதா ஸாஸிாஹா॥'

என்றார்கள் ஆலங்காரிகர். சந்த்ரனையே ஜயித்துள்ள உனது முகம் தாமரைகளை ஜயிக்கிறதென்று சொல்லவேணுமோ? என்று இங்கு உதாஹரணமுள்ளது. இதன்படி ப்ரக்ருதத்திலும் கேவல பகவதாச்ரயணமே பலஸித்தியைத் தருகையில் பகவானிலும் ப்ரபாவாதிகரான பாகவதர், ஆசார்யர் இவர்களுடைய ஆச்ரயணமானது பலஸித்தியைத் தருகிறதென்பது சொல்லவும் வேணுமோ? என்பதாகக் கைமுதிகந்யாய லக்ஷண ஸமந்வயமானது ஸ்வரஸமாகவே ஸித்திக்கின்றது. கைமுதிகந்யாய விஷயமான அர்த்தமானது மற்றொரு அர்த்தத்திற் காட்டில் குறைந்ததாகவேண்டும் என்கிற நியதியில்லை என்பதை முதலிலேயே நிரூபணம் செய்துள்ளேன். 'கைமுதிக ந்யாயஸ்ய ந்யூநாய்விஷயகெஷ' இத்யாதியாக குவலயாநந்த வ்யாக்யாந சந்த்ரிகையில் உதாஹ்ருதமான பூர்வபக்ஷம் பூர்வ

... இசைந்து சந்த்ரிகையில் ஸமாதாநம் காண்கிறது. பரமதாநு ...யாகலாமிது. சந்த்ரிகையின் ஸ்வாபிப்ராயமன்று. முன்பு உதாஹ்ருதங்களான ஸ்ரீராமாயணாதிகளில் கைமுதிகந்யாய லக்ஷணஸமந்வயம் வேணுமே.

ஆகையால் அதிகாரிவிபாகாதிகார ஸ்ரீஸூக்தியில் 'ஸித்தோபாய வதிவா நெறி' என்கிற வசநத்தை ஆசார்யநிஷ்டைக்கு ப்ரமாணமாக்கியதும் அதில் கைமுதிக ந்யாயத்தை அருளியதும் ஸுஸங்கதமே யாகிறது.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

செய்திகள்

ஸ்ரீ பாஷ்ய சாற்றுமுறை மகோத்ஸவம்.

இப்பவும் சென்ற விரோதி ஹூ ஆவணி மீ 24 உ வெள்ளிக்கிளிமை ஸ்ரீ அஹோபிலமடம் 42 வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹ திவ்யபாதுகாஸேவக ஸ்ரீவண்சடகோப ஸ்ரீஸ்ரீரங்க் சடகோப யதீந்த்ர மஹாதேசிகனால் தர்க்க, வ்யாகரண, ஸாஹித்யாதி சிரோமணி பரீக்ஷைகளில் தேறிய வித்யார்த்திகளின் ப்ரார்த்தனையின் பேரில் 'ஸ்ரீபாஷ்ய காலக்ஷேபம்' உபக்ரமிக்கப்பட்டது. இக்கோஷ்டியில். அந்வயித்தவர்கள் மொத்தம் 20 வித்யார்த்திகள். 11வது பரிவர்த்தியாக ஆரம்பிக்கப்பட்ட இந்த க்ரந்தத்தின் சாற்றுமுறையானது விக்ருதி ஹூ கார்த்திகை மீ 7உ புதன்கிழமை நிர்விக்நமாக நடந்தது என்பதை ஸந்தோஷத்துடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன். இப்பொழுது ஸ்ரீமத் கீதாபாஷ்ய காலக்ஷேபம் நடைபெற்று வருகிறது.

ஸ்ரீகார்யம் ஸ்ரீ அஹோபிலமடம். திருவள்ளூர்.

அத்திப்பட்டு ஸ்ரீ அழகிய சிங்கரின் திருநக்ஷத்திர மஹோத்ஸவம்.

நாளது கார்த்திகை மீ 23உ வெள்ளிக்கிழமை வழக்கம் போல் வேத பாராயணாதிகளுடன் உபக்ரமிக்கப்பட்டு 27உ செவ்வாய்க்கிழமை உத்திராடத்தன்று ஸ்ரீ பரமஹம்ஸேத்யாதி ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹ திவ்யபாதுகா ஸேவக ஸ்ரீவண்சடகோப ஸ்ரீ சடகோப ராமானுஜ யதீந்த்ர மஹாதேசிகன் திருநக்ஷத்ர மஹோத்ஸவம் பூர்த்தியடைந்தது. திருநக்ஷத்ரத்தன்று பாராயணாதிகளில் அந்வயித்த ஸ்வாமிகளுக்கு வழக்கம்போல் ஸம்பாவனையும் செய்யப்பட்டது.

ஸ்ரீகார்யம் ஸ்ரீ அஹோபில மடம். திருவள்ளூர்.

ஸ்ரீதசாவதாரன் ஸந்நிதி திருமங்கை மன்னன

திருநக்ஷத்திர மஹோத்ஸவம்

ஸ்ரீரங்கம்

நாளது விக்ருதி௵ ஸ்ரீ கார்த்திகை௴ 9௳ (24-11-50) ஸ்ரீ அஹோபில மடத்துக்குச் சொந்தமான ஸ்ரீ தசாவதாரன் ஸந்நிதியில் வழக்கம் போல் ஷை திருநக்ஷத்திர மஹோத்ஸவம் ஆரம்பிக்கப்பட்டு நான்கு நாள் நடந்து இனிது முடிவு பெற்றது. நான்கு தினங்களும் வேதபாராயணமும் திவ்யப்ரபந்தாநுஸந்தானமும் விமர்சையாக நடைபெற்றது. சாத்துமுறை தினத்தன்று திருமங்கைமன்னன் புறப்பாடும் அன்று ராத்திரி லக்ஷ்மீநாராயணன் திருக்கார்த்திகை உத்ஸவ புறப்பாடு முதலியவைகளும் விசேஷமாக நடைபெற்றன.

ஸ்ரீரங்கம் வாஸிகளான அநேக ஆஸ்திக லௌகிக பிரமுகர்களும்’ வைதிகர்களும் உத்ஸவத்தில் அந்வயித்து பக்தியுடன் கொண்டாடினார்கள். அன்று ஸாயங்காலம் 4 மணி முதல் 6 மணி வரையில் ஸ்ரீ அஹோபிலமடம் ஆஸ்தானவித்வான், தேசிக தர்சந விஜயத்வஜர், புத்தங்கோட்டகர், ஸ்ரீ. உ.ப. ஸ்ரீநிவாஸாசார்யர் ஸ்வாமியால் திருமங்கைமன்னன் வைபவத்தைப் பற்றியும் அவர் செய்தருளிய பாசுரங்கள் மஹிமையைப் பற்றியும் அமிருதவர்ஷமாக தேகச்ரமத்தையும் பாராட்டாமல் ஓர் அபூர்வமான உபந்யாஸம் செய்யப்பட்டது அனைவரும் கேட்டு ரொம்பவும் ஸந்தோஷப்பட்டார்கள்

வாத்தியார் ஆர். ஸ்ரீநிவாஸ ஐயங்கார்

ஸ்ரீவைஷ்ணவ ஸபை, கரூர்.

ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹனுடைய க்ருபா கடாக்ஷத்தாலும், ஸ்ரீ அழகியசிங்கரின் அநுக்ரஹத்தாலும் ஸ்ரீவைஷ்ணவ ஸபையின் 3வது வார்ஷிகக் கூட்டமானது நெரூர் வக்கீல் ஸ்ரீ. உ.ப. க்ருஷ்ணஸ்வாமி அய்யங்கார் பவநத்தில் 15-11-50-16-11-50. இரண்டு தினங்களிலும் வெகு விமர்சையாக நடந்தது. அவ்வமயம் மதுராந்தகம் வித்யாரத்நாகர, மீமாம்ஸா, விசாரத, ஸ்ரீ.உ.ப. ரங்கநாதாசார்ய சிரோமணி ஸ்வாமி ஆத்யக்ஷ்யம் வஹித்தார்.

ஸபையின் கார்யதர்சி ஸ்ரீ. கே. ஆராவமுத ஐயங்கார் வருடாந்தர அறிக்கையை படித்தபின்னர் இச்சபையின் நிரந்தரத் தலைவரும் ப்ரபல வக்கீலுமான நெரூர் க்ருஷ்ணஸ்வாமி ஐயங்கார் தலைமைநத்த நல்வரவு கூறிய பிறகு ஸ்ரீதேசிகன் வைபவத்தைப் பற்றி நீண்டதோர் உபன்யாஸம் மிக்க அழகாக செய்தருளினர்.

பிறகு ஸஹஸ்ரநாமம், ஸ்தோத்ரபாடம் முதலிய பரீக்ஷைகளில் தேறிய வித்யார்த்திகளுக்கு தலைவர் பரிசுகளைக் கொடுத்தார். இச்சபையின் சார்பாக ஸ்ரீரங்கநாதாசார்ய ஸ்வாமி ‘சூடிக்கொடுத்த நாச்சியார்’ ‘பெரியாழ்வாரும் கண்ணனும்’, ‘ஸத்ஸம்ப்ரதாயம்’ என்னும் உபந்யாஸங்களைச் செய்தருளினர். ஸ்வாமிக்குத் தக்கபடி ஸம்பாவனையும் செய்யப்பட்டது.

இதற்கு அநேக க்ராமங்களிலிருந்து பல வைஷ்ணவர்கள் வந்திருந்தது குறிப்பிடத்தக்கது. இச்சபையானது ‘வர்த்ததாம் அபிவர்த்ததாம்’ என்று ஸ்ரீந்ருஸிம்ஹன் ஸங்கல்ப்பிக்கவேணுமென்று அவனையே ப்ரார்த்திக்கிறேன்.

கே. ஆராவமுத ஐயங்கார், கரூர்.

𑌶𑍍𑌰𑍀𑌃

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑌃

ஸம்பாதகரின் குறிப்புகள்

𑌯𑍋𑌽𑌨𑍍𑌤𑌃 𑌪𑍍𑌰𑌵𑌿𑌶𑍍𑌯 𑌮𑌮 𑌵𑌾𑌚 𑌮𑌿𑌮𑌾𑌂 𑌪𑍍𑌰𑌸𑍁𑌪𑍍𑌤𑌾𑌂
𑌸𑌞𑍍𑌜𑍀𑌵𑌯𑌤𑍍𑌯𑌖𑌿𑌲𑌶𑌕𑍍𑌤𑌿𑌧𑌰𑌃 𑌸𑍍𑌵𑌧𑌾𑌮𑍍𑌨𑌾 ।
𑌅𑌨𑍍𑌯𑌾𑌂𑌶𑍍𑌚 𑌹𑌸𑍍𑌤𑌚𑌰𑌣𑌶𑍍𑌰𑌵𑌣𑌤𑍍𑌵𑌗𑌾𑌦𑍀𑌨𑍍
𑌪𑍍𑌰𑌾𑌣𑌾𑌨𑍍𑌨𑌮𑍋 𑌭𑌗𑌵𑌤𑍇 𑌪𑍁𑌰𑍁𑌷𑌾𑌯 𑌤𑍁𑌭𑍍𑌯𑌮𑍍 ॥

'ஸேவா' என்னும் பெயர் பூண்ட பத்ரிகை ஒன்று வரப்பெற்ருேம். இப்பத்ரிகை சென்ற ஐப்பசி மீ முதல் வெளிவர ஆரம்பித்திருக்கிறது. ஐப்பசி, கார்த்திகை இந்த இரண்டு மாஸத்திய ஸஞ்சிகைகள் வெளிவந்திருக்கின்றன. இதன் ஆசிரியர் ஸ்ரீ. உப. வெ. ஸ்ரீநிவாஸராகவாசார்யர். இது ஒவ்வொரு மாஸமும் திருவோணந்தோறும் வெளிவருமென்று இதன் ஆசிரியர் அறிவிக்கிருர்.

ஸேவா

இதன் வர்ஷச்சந்தா ரூ. 1-8-0 (கிடைக்குமிடம் ஸேவா கார்யாலயம், 11, S. N. செட்டித்தெரு, ராயபுரம் சென்னை) தர்ம தத்வத்தைப் பெண்கள் பாலர்களுட்பட அனைவரும் ச்ரமமில்லாமல் அறிந்துகொண்டு உய்யும் வகையில் எளிய தமிழ் நடையில் எழுதப்பட்ட வ்யாஸங்களைத் தாங்கிக்கொண்டு இப்பத்ரிகை ஆஸ்திக உலகிற்கு ஸேவை செய்ய வேண்டு மென்ற நோக்கத்துடன் இவ்வாசிரியர் இதனைத் தொடங்கியிருப்பதாக அறிகிருேம். ஆஸ்திக்யத்தைப் பரப்புவதே நமது முக்கியமான தொண்டு. அத்தொண்டில் பங்கு கொண்டு மிக்க உத்ஸாஹத்துடனும் அந்தரங்க சுத்தியுடனும் ஒத்துழைக்க முன் வந்திருக்கும் இப்பத்ரிகையை நாம் ஸந்தோஷத்துடன் வரவேற்கிருேம். ஆஸ்திகர்களனைவரும் ஸேவாவிற்கு ஆதரவளிக்கவேண்டியது அவச்யம். இக்கால ஸ்திதியில் ஒரு பத்ரிகையை ஆரம்பித்து நிர்வஹித்து நடத்துவதிலுள்ள பலவித ச்ரமங்களில் அர்த்த ச்ரமம்தான் ஸமாளிக்கமுடியாதது. அது அப்படிப்பட்டதென்று தெரிந்திருந்தும் இவ்வாசிரியர் இப்பத்ரிகையை ஆரம்பித்ததற்குக் காரணம், இக்காலத்தில் ஆஸ்திக்யத்திற்கேற்பட்டிருக்கும் சோசநீயமான தசையை மாற்ற வேண்டுமென்று இவ்வாசிரியர் கொண்டுள்ள தீவ்ரமான உத்வேகமே யென்று நாம் எண்ணுகிருேம். ஸ்ரீ சரண்யனது க்ருபை இவரது முயற்சியை வெற்றிகரமாக்க வேண்டுமென ப்ரார்த்திக்கிருேம்.

ஸம்பா

ஆஸ்திக்யத்தைப் பரப்பவும், வேதாந்த சாஸ்த்ரதத் குக்கு எடுத்துக்காட்டவும், தர்மஸம்ஸ்தாபனம் செய்யவும் ஏற்பட்ட ஒரு பத்ரிகையை அதன் கார்யத்தில் வெற்றிபெறச் செய்வதென்பது பெரும்பாலும் அப் பத்ரிகைக்கு விஷயப்ரதானம் செய்யும் பண்டிதர்கள் கையிலிருக்கிறதென்றே நமது அபிப்ராயம். பத்ரிகையில் வெளியிடப்பட வேண்டிய விஷயமோ ச்ருதி ஸ்ம்ருதி ப்ரதிபாத்யமான விஷயம்; விஷயப்ரதானத்திற்கு ப்ரார்த்திக்கப்படு கிறவர்களோ மஹநீயர்களான பண்டிதர்கள்; பத்ரிகைக்கு விஷயப்ரதானஞ்செய் வதால் அவர்கள் யாதொரு உபகாரத்தையும் அடைவதில்லை; தமது பராஜ க்ருபையாலேயே அவர்கள் விஷயப்ரதானம் செய்ய ஸம்மதிப்பதைத் விர வேறில்லை; ஆகவே விஷயத்திலும் விஷயப்ரதானம் செய்பவர்களிடத்திலும் க்க பஹுமானத்துடனிருக்க வேண்டியதாகையால் இப்படித்தான் விஷயப்ரதானம் செய்யவேண்டுமென்று அவர்களுக்கு பத்ரிகாசிரியர்கள் விதிப்பதென்பது சிதமே. எனினும் பத்ரிகையை வாசிக்கும் அதிகாரிகளின் சக்தி ஸாமர்த்யாதி களை நன்றாகக் கணிசித்துத் தமது வ்யாஸங்களை விஷயப்ரதானம் செய்பவர்கள் அமைத்தால் அது பத்ரிகையின் வெற்றிக்குப் பெரிதும் உபகரிக்கும். இம் மாதிரிப் பத்ரிகைகளைப் பலர் வாசித்தாலும் அதிலுள்ள விஷயங்களை நன்று யறிந்துகொள்வதற்கு அவர்களில் பலரிடமுள்ள ஸாமக்ரீ இவைதான்:— தமிழ் பாஷாஜ்ஞானம், சிலருக்கு பாஷாந்தரஜ்ஞானம், வெகு சிலருக்கு ஸம்ஸ்க்ருதத்தில் ஸ்வல்பஜ்ஞானம், லோகாநுபவம், ஏதோ ஸுக்ருத விசேஷத்தா லேற்பட்ட கொஞ்சம் ஆஸ்திக்யம், நம் வேதாந்தங்களிலும் தர்ம சாஸ்த்ரங்களிலும் சொல்லி யிருக்கும் விஷயங்களைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்ற ஆவல் என்றிவை களே. ஒரே ஒரு நெருப்புப் பொறியை வைத்துக்கொண்டு ஒருவன் கொழுந்து விட்டெறியும் அக்னி ஜ்வாலையைக் கிளப்புவதுபோல், இப்படிப்பட்ட வாசகர் களின் உள்ளத்தில் வெகு சிறிய அளவிலுள்ள ஆஸ்திக்யத்தையும் ஸம்ப்ரதாய ஜிஜ்ஞாஸையையும் வைத்துக்கொண்டு அவைகளை அபிவ்ருத்தி செய்து ஸம்ப்ரதாய ஜ்ஞானத்தையும் ஆசாரத்தையும் உண்டாக்கும் ஸுதுஷ்கரமான இந்த்ரஜால வித்யையைப் பத்ரிகையிலுள்ள வ்யாஸங்கள் செய்யவேண்டும். இதெப்படிக் கைகூடுமென்பதை ஆராயவேண்டும்.

வ்யாஸத்தைப் படிப்பவர்கள் படிக்கும்போதே அதில் சொல்லியிருக்கும் விஷயங்களைப் பூர்ணமாய் புரிந்துகொள்ளும்படி வ்யாஸங்க ளிருக்கவேண்டும். வாக்யங்கள் அதிக நீளமாகவோ, தூராந்வயமுள்ளவைகளாகவோ, க்லிஷ்டாந்வய முள்ளவைகளாகவோ இருக்கக்கூடாது. கூடியவரையில் ஸரளமான பதங்களே உபயோகிக்கப்பட்டிருக்கவேண்டும். தாம் எழுதும் வ்யாஸங்களைப் படிப்பவர்கள் தம்மிடமோ அல்லது பிறரிடமோ சென்று அவ் வ்யாஸங்களை அப்யஸித்து

...வதில்லையென்பதை வ்யாஸம் எழுதுபவர்கள் ...மம. வாசிக்கும்பொழுதே படிப்பவர்களுக்கு வ்யாஸம் அர்த்த மானால் உண்டு இல்லையேல் அவர்கள் மறுபடி அவ் வ்யாஸத்தைப் பற்றிக் கவலைப் படப்போவதில்லை. எனவே அவர்களைப் பொறுத்தமட்டில் அவ்வியாஸத்தா லேதும் பயனில்லை. ஸ்ரீமத்ரஹஸ்யத்ரயஸாராதி க்ரந்தங்களின் மணிப்ரவாள நடை வெகு கம்பீரமானது. அந்த நடையில் வ்யாஸங்களிருந்தால் இவ்வதிகாரி கள் அவைகளை ரஸித்து அநுபவிப்பது சிரமம். ஓர் உதாஹரணம் கூறுவோம்:- 'எல்லோருக்கும் தத்தம் ஸுகங்களை 'ஒரு நாயகம்' 'நண்ணாதார் முறுவலிப்ப' 'கொண்ட பெண்டிர்' இத்யாதிகளிற்படியே தெளியப் பார்க்குமளவில் இவை நிரந் தர வ்யாப்த துக்காந்தகாரத்தின் நடுவே மின்போலே தோற்றுவதும் மறைவது மாம்படி தோற்றும். போக்தாவுக்கு ஸ்தாநமுமாய் போகோபகரணமுமான ஸ்வ பர சரீரவர்க்கம் நிபுணனுக்கு குணபாதி புத்தியோக்யமாய் அநந்த துக்கமயமாய் அத்யந்தஹேயமுமாய் தமிழுள்ள ஜீவிதமுமாயிருக்குமென்னுமிடம் 'ஸமையாதம் [illegible]' என்றாற்போல் சொல்லுகிற ச்ருதிகளி லும் [illegible] [illegible] 'ஊனிடைச் சுவர் வைத்து' 'பொல்லாவாக்கை புண்ணாக்கை' 'மின்னின் நிலையில மன்னுயிராக்கைகள்' 'வேதநூற் பிராயம் நூறு' இத்யாதிகளிலும் விளங்கக் காணலாம்' (ஸ்ரீ பரமபதஸோபாநம்) இவ்வளவு கம்பீரமாயும் அழகாயு மமைந்துள்ள ஸ்ரீஸூக்தியின் பொருளை மேற் சொன்ன அதிகாரிகள் ஓராசிரியன் பக்கல் அநுவர்த்தித்துக் கேட்டாலன்றி அறிந்து அநு பவிக்கமுடியாது. இதில் சொல்லியுள்ள அர்த்த விசேஷத்தை அவர்கள் தாங்க ளாகவே ச்ரமமில்லாமல் ஒரு வ்யாஸத்தின் மூலம் படித்துத் தெரிந்து கொள்ள வேணுமென்றால் அவ்வியாஸத்தை எப்படி யமைக்கவேண்டு மென்பதைச் சற்று சிந்திக்கவேண்டும். ச்ருதிகளையோ, ஆழ்வார் ஸ்ரீஸூக்திகளையோ, இதர ப்ரமாணங் களையோ, வெறும் மேற்கோளாக எடுத்துக் காட்டினால் இக்காலத்திய வாசகர்களின் மனத்தில் பதிவதில்லை. அவற்றை மேற்கோளாகக் காட்டி உடனுக்குடன் அவற் றுக்குப் பதவுரையையும் கருத்துரையையும் கொடுத்தாலுங்கூட அந்த ஸ்ரீஸூக்தி களின் விசேஷார்த்தங்கள் அவர்கள் மனத்தில் நன்கு பதியுமென்று சொல்லவும் முடியாது. எல்லாவற்றையும் ஸ்பஷ்டமாய் விரிவாய் எழுதுவமென்றால் வ்யாஸம் வெகுவாக நீண்டுவிடும். அப்ராக்ருத ப்ரஸ்தாவம் அதிகமாய் போக நேரிடும். இதற்கென் செய்வது? மேலும் இக்காலத்தியவர்களின் [illegible] சொல் வதையெல்லாம் அப்படியே ப்ரமாணமாக ஏற்[illegible]கொள்வதற்கு உடன்படுவதில்லை.

184276